4897

ஸ்ரீ

# காஞ்சிக் கோயில்கள்

O2:457-2112K
N56
162275

307

19 JUL 1956

ஸ்ரீ:

# காஞ்சிக் கோயில்கள்

## (KANCHI TEMPLES)

u89

307
3-56



ஆசிரியர்:
டாக்டர் **M. K.** ஸ்ரீநிவாஸன்

*Copyright*

RUPEE 1/-

## LIFE LINES OF THE NATION

# "NICCO"

## CABLES AND CONDUCTORS

Hard Drawn Bare Copper Solid and Stranded Conductors
V.I.R. Insulated, Tough Rubber, Sheathed Cables
Cotton Covered and Braided Wires NICCOLEX
Super Enamelled Wires Bell and Telephone
Wires, Flexible Cords Etc.

★

The Products of the NATIONAL INSULATED
CABLE CO., OF INDIA LTD., CALCUTTA
are manufactured to BSS and ISD Specifications.

★

***Agents for Madras State:***

# P. NATESAN & CO., LTD.

**10, MOUNT ROAD, MADRAS-2.**

**Grams: "PEENATESCO"** **Phone: 86449**

★

BRANCHES AT:

**Frazer Square, COIMBATORE.**

**Pondy Road, VILLUPURAM.**

*Buy*

**KANCHEEPURAM SAREES AT MADRAS**

at Kancheepuram Price

# KANDA VILAS

(ESTABLISHED: 1892)

**Proprietor: A. K. THANGAVEL**

(President, Kancheepuram Town Reception Committee Eighth All India Sarvodaya Sammelan)

***Head Office:***

KANCHEEPURAM
Telephone No. 12

***Branches:***

TINNEVELLY
Telephone No. 121

SALEM
Telephone No. 123

**KANCHEEPURAM SILK & LACE SAREES**

***AVAILABLE AT:***

## A. Kandasami Mudaliar & Son

**176, BRODIES ROAD, MYLAPORE, MADRAS-4.**



பட்டு சரிகை சேலைகள்
காஞ்சீபுரம் விலைக்கு
சென்னையில் கிடைக்கும்

PHONE: 3344

ஒரே விலை!

காஞ்சீபுரம் கந்தவிலாஸ்

அ.கந்தசாமி முதலியார் சன்

176, பிருடீஸ் ரோட் (பழைய அமர் ஜோதி கேப்) மயிலாப்பூர்

213, தங்கசாலை தெரு (ராமர் கோயில் எதிரில்) மதராஸ்-1.

Post Box No. 530 Tel: No. 3181

# S. KUPPUSAWMY & CO.

**(THE POPULAR SPIRIT STORES)**

**15, Venkatachala Mudali Street, P.T., MADRAS - 3**

Telegraph Address: "VINEGAR"

**Manufacturers of Phenyle, Vinegar and French Polish**

*Denatured Spirit*

| | |
|---|---|
| Varnish or French Polish, Shelloc Varnish | Aeroplane Brand, Cow Brand, S. K. Brand |
| Phenyle | Bulldog Brand, Lion Brand, British Home Brand |
| Table Vinegar | Cow Brand, Parrot Brand |
| Castor Oil (Cold drawn) | Mother & Baby Brand |
| Distilled Water | S. K. & Co., |
| Acid Distilled Water | Motor Brand |
| Omum Water | Butterfly Brand |

*And also all kinds of PAINTS*

*Head Office* :—AT MADRAS

☆

*Branches :*

**6, Kalaspalayam, Bangalore City.**

**19/43, Pattabiramiah Lane, Governorpet, Vijayawada.**

**168, Long Bazaar, Vellore.**

# T.V.S.

UNITS

## STRIVE & SERVE



**T. V. SUNDRAM IYENGAR & SONS PRIVATE LTD., MADURAI.**

Automobile Engineers & Body Builders.

BRANCHES : TIRUCHIRAPALLI, TIRUNELVELI, PUDUKOTTAI, SALEM & COIMBATORE.



**SUNDARAM INDUSTRIES PRIVATE LTD.,**

Tyre Retreaders with Full Circle Moulds

PUDUKOTTAI & MADRAS.

GM GENERAL MOTORS GENUINE PARTS

**MADRAS AUTO SERVICE PRIVATE LTD.,**

Largest Motor Parts and Accessories Dealers,

MADRAS & BANGALORE.



**SOUTHERN ROADWAYS PRIVATE LTD.,**

Largest Independent Road Transport Company in India

MADURAI.



**SUNDARAM MOTORS PRIVATE LTD.,**

Fiat and Plymouth Cars, Fargo Trucks, Ferguson Tractors, Willys Jeeps & Utility Vans.

MADRAS-6.



**THE MADRAS MOTOR INSURANCE CO., LTD.,**

MADRAS.

TVS

# M.B. வரதராஜன் & சன்ஸ்

உயர்ந்த ரக பட்டு ஜரிகை
சேலைகள், சொந்த நெசவில்
தயாரிப்பவர்கள்

தலைமை ஆபீஸ் :

## ஸ்ரீனிவாஸ் சில்க் ஹவுஸ்

சேஷாத்திரிபாளையம் :: சின்னகாஞ்சீபுரம்

தந்தி : "மைசூர்ஹவுஸ்"
டெலிபோன் : 101

பிராஞ்சு :

## ராஜேஸ்வரி சில்க் ஹவுஸ்

மேட்டுத் தெரு :: காஞ்சீபுரம்

N.B.—எங்களிடம் தயாராகும் பட்டுச் சேலைகள் உழைப்பு, உறுதி, சாயம், சரிகை இவைகளுக்கு உத்திரவாதமுள்ளவை. தங்கள் தேவைக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.



ஒவ்வொரு தினமும் நீங்கள் அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை லைப்பாய் சோப்பினால் கழுவிக்களைந்து தினமும் உங்களைக்காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
லைப்பாயின் "பாதுகாக்கும் நுரை" உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுகிறது.
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY SOAP
இந்தியாவில் தயாரித்தது
L. 244-50 TM

# NEON & FLUORESENT SIGNS

*Manufactured by:*

**TUBE LIGHTS (PRIVATE) LTD.**

**3, STRINGERS STREET**

**MADRAS - 1.**

*Latest Design*

*and*

*Best Quality*

## SILK SAREES

●

**NALLI CHINNASAMI CHETTY**

SILK CLOTH & PIECE GOODS MERCHANT

THYAGARAYANAGAR - - - MADRAS - 17

Phone : 88115

## MORE TIME FOR WORK AND LEISURE



Specially designed and built for Indian roads and climate, ROYAL ENFIELD will take you with ease, speed and comfort over City, Town and Country Roads.

**ROYAL ENFIELD**

ADD LEISURE TO YOUR BUSY HOURS

Ride a ROYAL ENFIELD on the Road to Progress.

Ask to-day about "Pay while you Ride" Plan.

---

*Progressive Manufacturers :*

**THE ENFIELD INDIA LIMITED**

**36-C, Mount Road :: MADRAS-2.**

---

*Sole Selling Agents :*

**THE MADRAS MOTORS (PRIVATE) LIMITED**

**36-C, Mount Road**
**MADRAS-2.**

**21, Jayachamarajendra Road**
**BANGALORE-2.**



போன்: 14

# ராம் அன்டு கோ.,

(உரிமையாளர் :—M. B. ராதாகிருஷ்ணய்யர்)

பட்டு ஜரிகை சேலை உற்பத்தியாளர்

**25, கண்ணப்பன் தெரு . . . காஞ்சிபுரம்**

எங்கள் சொந்தத் தறியில் பட்டுப்
புடவைகளும், டிஷ்யூ சேலைகளும்,
பலவித டிசைன்களில் ஆர்டரின்
பேரில் தயார்செய்து கொடுக்கப்படும்

**உறுதிக்கும் சாயத்திற்கும் உத்திரவாதம்**

# RAM & CO.,

**(Proprietor: M. B. RADAKRISHNA IYER)**

**LACE SILK SAREE PRODUCERS**

**25, Kannappan St., KANCHEEPURAM**

•

*N. B.—Specialists in Manufacturing Tissue Sarees*

## உள்ளீடு

| | பக்கம் |
|---|---|
| மதிப்புரை (கனம் காமராசர்) | 3 |
| முன்னுரை | 4 |
| ஸ்ரீ வரதராஜர் கோயில் | 5 |
| ஸ்ரீ திருத்தண்கா | 9 |
| ஸ்ரீ சொன்ன வண்ணம் செய்த பெருமாள் | 13 |
| ஸ்ரீ சித்திரகுப்தர் கோயில் | 17 |
| ஸ்ரீ சத்திய விரதேஸ்வரர் ஆலயம் | 19 |
| ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம் | 21 |
| ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயம் | 24 |
| ஸ்ரீ காமாட்சி கோயில் | 27 |
| ஸ்ரீ அஷ்டபுஜம் கோயில் | 30 |



கனம் உயர்திரு. காமராஜ் அவர்கள்
(சென்னை முதல் அமைச்சர்)

கு. காமராஜ்,
CHIEF MINISTER OF MADRAS

FORT ST. GEORGE
MADRAS

23--5--56

அன்புமிக்க நண்பருக்கு,

சர்வோதய சம்மேளனத்தின்போது காஞ்சீபுரம் கோவில்களின் முக்யத்தைக் குறித்தும், கோவில்களின் கலை, சிற்பம், ஓவியம் முதலிய எல்லாத் துறைகளிலும் காஞ்சிமாநகர் சிறந்து விளங்குவது குறித்தும் தாங்கள் ஒரு விசேஷ இதழ் வெளியிட இருப்பதுகண்டு நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

இப்புத்தகம் சர்வோதய சம்மேளனத்திற்கு விஜயம் செய்யும் அனைவருக்கும் மிகவும் நல்ல முறையில் பயன் தரும் என்று எண்ணுகிறேன். இச்சிறந்த பணியில் ஈடுபட்டுள்ள தங்களைப் பாராட்டுகிறேன்.

தங்களன்புள்ள,
காமராஜ்

டாக்டர் எம். கே. ஸ்ரீநிவாசன்,
ஆசிரியர்,
காஞ்சிக் கோயில்கள்,
காஞ்சீபுரம்.

02:457.2112K
N56

# முன்னுரை

பேரன்புடையீர்!

நூலிற்கு ஒரு முன்னுரை எழுதுவது நூலாசிரியனது கடமை என்னும் கொள்கைபற்றி இந்நூலிற்கு முன்னுரை யெழுதப் புகுந்தேனே யல்லாது யான் ஒரு புலவனுமல்லன், எழுத்தாளனுமல்லன். எனினும் காஞ்சியில் வாழ்ந்த எனது அருமைத் தந்தை **ஸ்ரீ கோமாண்டூர் இளையவல்லி ராமானுஜ அய்யங்கார்** அவர்கள் அடியேனைச் சிறு வயதிலேயே ஸத்ஸம்ப்ரதாயங்களில் பழக்கிவைத்து ஆசையூட்டியதே இப் புத்தகம் வெளியிடக் காரணமாயிற்று. இவ்வாசையின் வளர்ச்சியினால் காஞ்சியிலுள்ள எல்லாக் கோயில்களையும், திருக்கோயில்களிலுள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவைகளைப் பற்றியும் நன்கு விளக்குவதுடன் கோயில், திருவுருவம் முதலியவைகளைப் படம் பிடித்து வெளியிட்டும், கோயில்களைப் பற்றிய புராண வரலாறுகளையும் எடுத்து விளக்கிப் பொதுமக்களுக்குப் புத்துணர்ச்சி உண்டாக்க வேண்டுமென்ற ஆவலுடன் சுதேசமித்திரன், தினமணி போன்ற செய்தித் தாள்களுக்கு எழுதியனுப்பினேன். அவை நல்ல முறையில் வெளிவந்ததாலும் ஆசைக்கு அளவில்லையாதலாலும் இவைகளைத் தொகுத்து ஒரு சிறந்த நூலாக்கி பக்திமான்களுடைய கைகளில் சமர்ப்பிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. நண்பர்களது ஒத்துழைப்பினால் காஞ்சியிலுள்ள ஒன்பது கோயில்களை மட்டும் **காஞ்சிக் கோயில்கள்** என்ற பெயரில் நல்ல ஆர்ட்ஸ் தாள்களில் கண்களைக் கவரும் சித்திரங்களுடன் அச்சிட்டு **ஸ்ரீ அருளாளப் பெருமானின்** வைசாக மகோத்ஸவ மத்தியில் நடைபெறும் உலகம் புகழும் சர்வோதயப் பெருவிழாவில் இந் நூலை வெளியிடத் துணிந்தேன். நூலாகச் செய்துகொள்ள அனுமதியளித்த சுதேசமித்திரன், தினமணி, Sunday Standard ஆசிரியர்களுக்கும், நூலை நல்ல முறையில் ஆக்க உடனிருந்து உதவிய **தமிழாசிரியர் பிரசங்க ரத்னாகரம் வித்வான் வ. கை. கேதாரேச்வர சர்மா** அவர்கட்கும் குறுகிய காலத்தில் விரைவாகவும் அழகாகவும் அச்சிட்டளித்த **கமர்ஷியல் அச்சகத்தார்க்கும்** மேலும் இந்நூல் வெளிவர உடனிருந்து உற்சாகமூட்டிய எனது நண்பர்களுக்கும் இச் சிறு நூலிற்கு மகிழ்ச்சியுடன் மதிப்புரை வழங்கிய சென்னை மாகாண முதலமைச்சர் **கனம் உயர்திரு காமராஜ நாடார்** அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்நூல் நல்ல முறையில் வெளிவந்து கற்றோர் உள்ளத்தைக் கவருமாயின் ஏனைய கோயில்களையும் இம்முறையில் வெளியிடத் துணிவு உண்டாகும் என்பது என் நம்பிக்கை. இந்நூலைக் கண்ணுறும் அன்பர்கள் பிழை பொறுத்து இச் சீரிய தொண்டிற்குச் சிறப்பு அளிக்கும் அரிய கருத்துக்களைக் கூறின், ஆர்வமுடன் வரவேற்கிறேன்

காஞ்சிபுரம்
24-5-56

இங்ஙனம்,
**M. K. ஸ்ரீநிவாஸன்**

162275

# ஸ்ரீ வரதராஜர் கோயில்

## (Sri Varadarajar Temple)

"மண்டலம் நிறைந்த திங்கள்
வதனமும் கமலக் கண்ணும்
குண்டலம் சுடரும் காதும்
குறுநகைப் பவள வாயும்
தண்டுழா யலங்கல் மார்பும்
தடக்கையோர் நான்குமாகக்
கண்டனன் மறையுங் காணுக்
கரியவ னுருவ மம்மா."

தென்னுட்டில் வேகவதி ஆற்றங் கரையினிலே காஞ்சிபுரம் என்னும் மூதூர் ஒன்று முன்னுளில் மாண்புற்று விளங்கிற்று. பல்லவ நாட்டின் தலை நகராய்த் திகழ்ந்த அம் மூதூர் மகேந்திர வர்மன் காலத்தில் கலை வளம் பெற்றுத் தலையெடுத்து நின்றதென்று பாரத நாட்டு வரலாறு தெரிவிக்கின்றது.

தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய அப் பெரும் பதியில், சமண, வைணவ, சைவ சமயத்தைப் பேணி வளர்த்த சான்றோர் பலர் வாழ்ந்தனர். அங்கிருந்த பல்கலைக் கழகத்தில் பன்மொழிப் புலவர் பலர் பணியாற்றினர். செந்தமிழ்க் கல்வி சிறந்தோங்கியது.

இத்தகைய சரித்திரப் புகழ்பெற்ற நகரம் இன்றும் சில துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. இந்நகரம் சென்னைக்குத் தென்மேற்கே நாற்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ளது.

### புண்ணிய ஸ்தலம்

" தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோவில்" என்று ஸ்ரீமாணிக்க வாசகராலும், "நகரேஷு காஞ்சி" என்று மகாகவி காளிதாஸராலும், "முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி தன்னில்" என்று ஸ்ரீ வேதாந்த தேசிகராலும் புகழ்ந்து கூறப்பட்ட புண்ணிய ஸ்தலம் காஞ்சிபுரம்.

சமீப காலத்தில் இருந்த கீர்த்தி வாய்ந்த நகர அமைப்புப் பேராசிரியரான 'கேடிஸ்' காஞ்சியின் அமைப்பைப் பற்றி மிகவும் புகழ்ந்து கூறியிருக்கிருர்.

இந்நகரில் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் பெற்ற ஸ்ரீ வைஷ்ணவ திருப்பதிகள் பதினெட்டு உள்ளன. இக்கட்டுரையானது மிகவும் முக்கியமானதும், கீர்த்தி வாய்ந்ததும், ஸ்ரீ பகவத் இராமானுஜருக்கு திருக்கச்சி நம்பிகள் மூலமாக ஆறு வார்த்தைகள் அருள் செய்த ஸ்ரீ வரதராஜப் பெருமானைப் பற்றியது.



ஸ்ரீ வரதர் (ஏகாந்த சேவை)

(ஆறு வார்த்தைகள்: 1. பரத்வமே நாம். 2. பேதமே தர்சனம், 3. உபாயமும் ப்ரபத்தியே. 4. அந்திம ஸ்ம்ருதியும் வேண்டாம். 5. சரீரத்தின் முடிவிலே மோக்ஷம். 6. பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது;)

இக் கோவிலிற்குள் புராணப் பிரசித்தி பெற்ற ஸ்தலங்கள் மூன்று இருக்கின்றன.

1. அத்திகிரி என்ற சிறு குன்றின் சிகரத்திலுள்ள ஸ்ரீ வர்தராஜப் பெருமாள் சன்னிதி.

2. அக்குன்றின் கீழ் அமைந்த குகையிலுள்ள ஸ்ரீ யோகா நரசிம்மர் சன்னிதி,

3. ஸ்ரீ பெருந்தேவித் தாயார் சன்னிதி.

இக்கோவிலில் ஐந்து பிராகாரங்கள் இருக்கின்றன. கோவிலைச் சுற்றிக் கண்டவர் வியக்கத் தக்க பெரிய திரு மதில்கள் நான்கு பக்கங்களிலும் உள்ளன. மேலண்டை சிறியதும், கிழண்டை பெரியதுமான இரு கோபுரங்கள் இருக்கின்றன. இக் கோவிலின் விஸ்திரணம் சுமார் இருபத்தி மூன்று ஏக்கர்.

### நூறு கால் மண்டபம்

முதல் பிராகாரத்தில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த நூறு கால்கள் நாட்டப் பெற்ற ஒரு மண்டபம் இருக்கின்றது. இது பதினாறுவது நூற்றாண்



ஸ்ரீ வரதர் (வெங்கடாத்திரி கோண்யுடன்)

டின் விஜய நகரத்து அரசரால் கட்டப்பட்டது. ஒவ்வொரு தூணிலும் மனத்தைக் கவரும் சிற்ப வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இம் மண்டபத்தின் நான்கு மூலைகளிலும் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட வளையல்கள், சங்கிலி போல வெகு அழகாகக் காட்சி அளிக்கின்றன.

இம் மண்டபத்தை யடுத்து ஆனந்த தீர்த்தம் என்னும் புஷ்கரணி இருக்கின்றது. இக் குளத்தின் நடுவே நீராழி மண்டபமும், ஸ்ரீ அத்திவரதருக்கு ஒரு மண்டபமும் இருக்கின்றது. அம்மண்டபத்தின் கீழ் அத்தி வரதர் சயனித்துக் கொண்டு இருக்கின்றார். இவர் நீரின் அடியில் சயனித்துக் கொண்டிருப்பதால், இவரை நாம் தரிசிக்க முடியாது. இவரை சுமார் நாற்பது வருடங்களுக்கு ஒரு முறை தண்ணீரிலிருந்து வெளியே மக்களின் தரிசனத்திற்காக எடுக்கின்றார்கள்.

### நந்தவனம்

இப்பிராகாரத்தில் அநேக ஆழ்வார் சந்நிதிகளும் ஒரு நந்தவனமும் இருக்கின்றன. இந்த நந்தவனத்தில் மல்லிகை, ரோஜா, நஞ்சாவட்டை, பாரிஜாதம், சாமந்தி, மனோரஞ்சிதம் முதலிய புஷ்பச் செடிகளும், மா, பலா, தென்னை, கமுகு முதலிய பல விருட்சங்களும் நிரம்பப் பெற்றுள்



ஸ்ரீ பெருந்தேவித் தயார்

ளன. இத்தோட்டத்தில்தான் இந்திய அரசாங்கத்தின் உணவு மந்திரியாக இருந்த ஸ்ரீ முன்ஷி, தென்னாட்டிலே வனமகோத்ஸவத்தைத் துவக்கி வைத்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. சமீப காலத்தில் வனமகோத்ஸவ கமிட்டியாரால் இத் தோட்டம் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இத் தோட்டத்தில் ஸ்ரீ பெருந்தேவித் தாயார் பிரதி வெள்ளிக்கிழமையும் எழுந்தருளி உற்சவமும் நடக்கின்றது.

இக்கோவிலின் பின்புறமுள்ள பொற்றாமரையில் ஸ்ரீ பெருந்தேவித் தாயார் அவதரித்ததாகக் கூறுகின்றார்கள். இத்தாயார் சன்னிதி ஒரு சிறு குன்றின்மேல் உள்ளது.

அத்திகிரி மலைக்கு நுழைந்ததும் ஸ்ரீ குஹா நரசிம்மர் ஸன்னிதியுள்ளது. பெருமாள் ஸ்ரீ அழகியசிங்கர்; ஸ்ரீ ஹரித்ரா தேவியம்மாள் வீற்றிருந்த திருக்கோலம், மேற்கே திருமுக மண்டலம்; பிரம்மாவிற்கு பிரத்தியக்ஷம். இவரைப் பூதத்தாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்திருக்கின்றார்கள்.

### அத்திகிரி

இருபத்திநான்கு படிகள் ஏறி அத்திகிரியை அடைய வேண்டும். பெருமாள் நின்ற திருக்கோலம் மேற்கே திருமுக மண்டலம்.



ஸ்ரீ சக்கரத்தாழ்வார்

ஸ்ரீ நம்மாழ்வார். கலியன் பூதத்தாழ்வார், வேதாந்த தேசிகர், பேயாழ்வார், கூறத்தாழ்வார் ஆகிய இவர்கள் ஸ்ரீ வரதராஜரை மங்களாசாஸனம் செய்திருக்கின்றார்கள்.

ஸ்ரீ வரதராஜருக்கு நித்தியஉத்ஸவம், மாச பஞ்ச பருவங்கள், வைகாசி மாதத்தில் பிரம்ம உத்ஸவம் முதலியவைகள் வெகு சிறப்பாக நடக்கின்றன. வைகாசி பௌர்ணமி யன்று ஸ்ரீ வரதராஜரின் கருடசேவை மிகவும் விசேஷமாக நடைபெறுகின்றது. பிரதி வருடமும் லட்சக்கணக்கான மக்கள் வந்து தரிசிக்கின்றனர்.

### ஸ்தல புராணம்

அத்திகிரி மஹாத்மியம் சொல்லும் வரலாறு: பிரம்மாவிற்கு மனம் மாசு அடைந்ததால் உலக சிருஷ்டி நின்றுவிட்டது. அவர் கங்கைக் கரையில் தவம் செய்தார். ஆங்கு ஓர் அசரீரி தோன்றி (பிரம்மா தனது மனத்தை பரிசுத்தமாக்கிக் கொள்வதற்கு ஓர் ஆயிரம் யாகம் செய்யவேண்டுமென்றும் அது அவருடைய ஆயுட் காலத்தில் செய்து முடிக்கமாட்டாதாகையினால் காஞ்சிக்குச் சென்று யாகம் செய்யும்படியும்' சொல்லிற்று. காஞ்சிபுரம் என்னும் ஸத்தியவிரத க்ஷேத்திரத்



திருத் தேர்

தில், ஒரு யாகம் செய்தால் ஆயிரம் யாகம் செய்த பலன் கிடைக்குமென்று கூறியது.

### பிரம்மாவின் யாகம்

உடனே பிரம்மா காஞ்சிக்குச் சென்று யாகம் செய்தார். அப்பொழுது பிரம்மாவினுடைய பத்தினி ஸரஸ்வதி தன் கணவன்பால் உள்ள மனத்தாங்கலால் வேகவதி என்ற ஆறாக வேகமாகப் பிரவேசித்து யாகத்தை அழிக்க முற்பட்டாள். பிரம்மாவினுடைய வேண்டுகோட்கு இணங்கி மஹா விஷ்ணு யதோத்தகாரியாக வந்து நிர்வாணமாகக் குறுக்கே சயனித்துக்கொண்

டார் அப்பொழுது பிரம்மாவினுடைய யாகம் பூர்த்தியாகி ஆயிரம் சூரியன் பிரகாசத்துடன் ஸ்ரீ வரதராஜர் யாகக் குண்டத்திலிருந்து தோன்றினார். பிரம்மாவினுடைய வேண்டுகோளுக்கு இணங்கி மஹாவிஷ்ணு அங்கேயே தங்கி ஆஸ்திகர்களை இரட்சிக்கின்றார் என்பது பெரியோர்களின் நம்பிக்கை.

### கிளைவின் காணிக்கை

கிருத யுகத்தில் பிரம்மாவுக்கும், திரேதா யுகத்தில் கஜேந்திரனுக்கும், துவாபரயுகத்தில் பிரகஸ்பதிக்கும், கலியுகத்தில் ஆதிசேஷனுக்கும் பிரத்தியட்சம் என்பது ஐதிகம். இக்கோவிலில் மிகப் பழமையானதும், விலையுயர்ததுமான அநேக ஆபரணங்கள் உள்ளன. இந்தியாவில் ஆங்கிலேய அரசாங்கத்தை நிலைநாட்டிய கிளைவ் பிரபு "மகரகண்டி" என்னும் நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற விலையுயர்ந்த ஓர் ஆபரணத்தை ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்குக் காணிக்கையாகக் கொடுத்தது வியக்கத்தக்கது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செங்கல்பட்டு மாவட்டத்தின் தண்டல் நாயகனாக (கலெக்டர்) இருந்த 'ப்ளேஸ்' என்னும் ஆங்கிலேயர் விலையுயர்ந்த அணிகளை இப்பெருமாளுக்குக் கொடுத்தது போற்றத் தக்கது. இக்கோவிலிலுள்ள அணிகளின் மதிப்பு சுமார் ஒன்பது இலட்ச ரூபாய்.

"வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி
வாழி யெதிராசன் வாசகத்தோர்—வாழி
சரணா கதியெனுஞ் சார்வுடன் மற்றொன்றை
யரணா கக்கொள் ளார்தாரன்பு."

# திருத்தண்கா

## (Tiruthanga)

காஞ்சிபுரியின் பலபிரிவுகளில் தண்கா அல்லது திருத்தண்கா என்னும் பிரிவு முக்கியமான தாகும். தண்காவைச் சார்ந்த இடமே தூப்புல் என்பதாகும். தண்-குளிர்ச்சி (பொருந்திய); கா-சோலை என்பர். இவ்விடத்தைப்பற்றி வைணவ சமயத்தில் தோன்றிய ஆழ்வார்களில் முதன்மையாகக் கருதப்பட்டு போற்றப்படும் நம்மாழ்வாரும், ஆழ்வார்களில் கடைக்குட்டியாகத் தோன்றிய திருமங்கை மன்னனும், தாங்கள் பாடிய பாடல்களிலே குறிப்பிட்டுள்ளது நினைக்கத் தக்கது.

திருத்தண்கா என்னுமிடத்திலே திருமால் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறன். அவனை விளக்கொளி எம்பெருமான் என்று அழைக்கின்றனர்.

முன்னொரு காலத்தில் இக்காஞ்சிமா நகரின் கண் வந்து பெரியதொரு வேள்வியைப் பிரமன் செய்ய நேர்ந்ததாம். அவன் செய்த வேள்விக்கு அவனுடைய மனையாளே இடையூருக இருக்க நேர்ந்தது. ஒரு சமயம், கலைவாணியானவள் தன் புருடனைப் பார்த்து, 'இலட்சுமி' உயர்ந்தவளா, நான் உயர்ந்தவளா?' எனக் கேட்டாள். திருமாலின் உந்தியில் தோன்றியவர் நான்முகன். அதனுல் இலக்குமியோ தாயாயிற்று. அவள் குறைந்தவள் என்று அவர் எவ்வாறு இயம்புவார்? இலக்குமியே உயர்ந்தவள் என்றுர். கலைமகள் கோபம் கொண்டாள். புருடனைப் பிரிந்து சென்றுள். அவ்வாறிருக்கும் சமயமே, நான்முகன் யாகம் செய்ய நேர்ந்த காலம். வேள்விக்கு வந்து, தனக்கு உதவி செய்யும்படி சரஸ்வதியை அழைத்தார். அவள் வர மறுத்துவிட்டாள். அவள் இன்றியே வேள்வியை பிரம்மா தொடங்கினர். இதையறிந்த சரஸ்வதி, அதைக் கெடுக்கப் பல வழிகளில் முயன்றுள். நகரை இருள் காடாக்கினுள். யாகத்திற்கு எஞ்ஞான்றும் வைரிகளாக உள்ளோர் பலரைக் கொண்டு கெடுக்கலானுள். இன்னும் பல இன்னல்களைச் செய்து, வேள்வி செய்ய முடியாதபடிச் செய்து அயனை அலைக்கழிக்கப் பார்த்தாள்.

பிரமன், திருமாலிடம் பேரன்பு பூண்டவர். எண்ணுதற்கு அரிய பெரும் வேள்விகள் புரிந்தவர். யாதொரு பயனையும் கோராது, திருமாலை வேள்வியின் வாயிலாகக்கண்டு இன்புறவேணும் என்கிற அவாக் கொண்டவர். தான் செய்யும் வேள்விக்கு சாதனமும் அவனே (திருமாலே), வெள்வியினுல் ஏற்படும் நற்பயனும் அவனே (திருமாலே) என்ற மன உறுதி கொண்டவர். அவ்வெண்ணத்தை எந்நாட்டாரும் அறிய, திருமால், பிரமன் செய்த வேள்விக்குத் துணை புரிந்து, கலைமகளால் நேரிட்ட இன்னல்களையும் ஆங்காங்கு தோன்றி அவைகளைத் தொலைத்து, முடிவில் வேள்வியில் தோன்றிப் பேரருள் புரிந்து, பேரருளாளன் (வரதன்) எனப் பெயர் பெற்று அத்திகிரியின் மேல், குன்றின்மேல் இட்ட விளக்கு போல விளங்கினுர்.

பிரமனுக்கு இன்னல்கள் நேரிட்ட காலத்தில் முதலாவதாக திருமாலே தோன்றி உதவி செய்த தோற்றத்தையே விளக்கொளி பெருமாள் என்கிறுர்கள். இருள் அடைப்பு உண்டான காலத்து, திருமால் தோன்றி இருட்டைப் போக்கினுர். வேள்வி அதனுல் சரிவர நடக்க வழியாயிற்று. சரஸ்வதியினுல் செய்யப்பட்ட கெடுதிகளால் மனம் குழம்பி, என்ன செய்வது என்று அறியாது, ஞானம் நீங்கி அஞ்ஞானத்தாலே மூடிக்கிடந்த அக இருளை, விளக்கொளி சாதாரண இருட்டைப் போக்குவது போல, பிரமனுக்குப் போக்குவிக்க வந்த பெருமானுர் திருமால்.

இங்கே திருமால் (மூலவர்) திருமகள், மண்மகள் இருவரோடும் திகழக் காணலாம். பரமன் மேற்கே பார்த்தவண்ணம் நின்று காட்சியளிக்கிருர்.

இக்கோவிலில் ஆண்டாளுக்கும், தாயாருக்கும் இரு சந்நிதிகள் தனியே உண்டு. தாயாரின் திரு

நாமம் மரகதவல்லி என்பதாகும். இங்கே உள்ள பெருமானையும் தாயாரையும் ஆழ்வார் சேர்த்தே பாடியிருப்பது மிகவும் விசேடமாகும்.

தண்கா என்பதைத்தான் மாறன் 'அம்பூந்தேனிளஞ்சோலை' என்றார்.

திருமங்கை ஆழ்வார் இயற்றிய பிரபந்தங்களில் திருநெடுந்தாண்டகம் என்பது ஒன்று. அதில் முதல் பாட்டு விளக்கொளிப் பெருமானைப் பற்றியதாகும்.

"மின்னுருவாய் முன்னுருவில் வேதநான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள்தானாய்



ஸ்ரீ வேதாந்த தேசிகர்

பின்னுருவாய் முன்னுருவில் பிணி மூப்பில்லாப்
பிறப்பிலியாயிறப்பதற்கே யெண்ணாது, எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதமைந்தாய்
புனலுருவாயனலுருவில் நின்ற வெந்தை
தளிர்புரையும் திருவடி யென்தலைமேலவே."

இத்துடன் இப்பிரபந்தத்தின் நடுவிலும் மற்றுமோர் பாசுரத்தாலும் இப்பரமனைப்பற்றிக் கூறுகிறார்:

"முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலைமூவா
மூவுலகுங் கடந்தப்பால் முதலாய்நின்ற
அளப்பரிய வாரமுதை யரங்கமேய
வந்தணனை யந்தணர்தம் சிந்தையானை
விளக்கொளியை மரகதத்தை திருத்தண்காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக்கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று
மடக்கிளியை கைகூப்பி வணங்கினாளே."

இங்கே திருவையும் திருமாலையும் சேர்த்துப் பேசப்படும் ஒரு பெயராலே பரமன் அழைக்கப்படுகிறார். வான்மீகி முனிவர் ராமபிரானை சூரியனாகவும் சீதையை ஒளியாகவும் வடமொழிப் பாடலினால் கூறியிருக்கிறார். இந்தப் பெருமானை செவிக்கு இனிய செஞ்சொல்லான தமிழ் மொழியாலே ஆழ்வார், விளக்கொளி என்று நாமம் சூட்டுகிறார். விளக்கு திருமாலாவர். அதன் ஒளி திரு ஆவாள், அதை இன்னும் சற்று விவரிக்கவோ என்னவோ முதற் பாசுரத்தில் விளக்கொளி என்று சொன்னதோடு நில்லாது, பின்னால் சொல்லிய பாசுரத்தில் 'விளக்கொளியை மரகதத்தை திருத்தண்காவில்' என்று தாயாரையும் சேர்த்துப் பாடியிருக்கிறார். மக்களுக்கு நல் வழியில் நடக்க விளக்கின் ஒளி வேண்டும். விளக்கொளியால் நற்பயனனைத்தும் பெறலாம் என்பது புலனாகிறது.

திருமாலும், திருமகளும் திகழ்ந்துறையுமிடம் திருத்தண்கா. திருத்தண்காவின் கீழ் உள்ள இடம் எல்லாம் புல் அடர்ந்த இடம்- அதுவே தூப்புல். பரிசுத்தமான தருப்பைகள் உள்ள இடம் அந்தணர் வேள்விக்கு வேண்டிய முக்கியமான ஒரு பொருளாகும், அங்கே வாழ்ந்தவர் வேள்வி செய்த மரபினர்.

அம்மரபிலே தோன்றினார் ஒரு புனிதர். அவருக்கு தாய்தந்தையர் சூட்டிய திருநாமம் வேங்கடநாதன். இம் மா புருடன் புரட்டாசி திருவோண நந்நாளிலே உலகோரை உய்விக்கத் தோன்றிய உத்தமர். இருபது வயதிற்குள் செந்தமிழும், வடகலையும் திகழ்ந்த நாவலராயினர். தென்னாற்காடு ஜில்லாவில் கடலூருக்கு அருகாமையில் கடில நதிக்கரையில் உள்ள திருவயிந்திரபுரத்தில் ஒரு சிறு குன்றின்மீது சிலகாலம் தங்கியிருந்து தவம்புரிந்து பரிமுகன் அருள் பெற்றார். வேத வேதாந்தங்களை தன் அம்மானான (மாமா) கிடாம்பி அப்புள்ளாரிடம் நன்கு கற்றவர். கற்றதனாலாய பயனுக்கு ஏற்ப தம் வாழ்நாளில் நடைமுறையில் அனுட்டானத்தில் கொண்டுவந்தார். தாம் கற்றதோடு நில்லாது உலகிலுள்ளோர் உய்ய பலரையும் செயல்முறையில் நன்றாக திருத்திப்பணி கொண்டவர். வைணவ சமய நெறிகளை நாடும்,

நகர்மும் நன்கறியச் செய்த புகழ், ஸ்ரீபெரும்பூதூர் வந்த வள்ளலான நம் இராமாநுஜ முனிக்கே உரித்தாம். ஆனால், அவருடைய காலத்துக்குப் பின், வைணவக் கொள்கைகளை கட்டிக்காத்த பெருமை தூப்புலில் தோன்றிய வேங்கடநாத னுக்கேயாம். இவர் எழுதிய வடமொழி நூல்கள் பல. நல்வழித் திருப்பும் தோத்திரங்கள் வேதாந்த விழுப் பொருளைக் காட்டும் நூல்கள் முன்னோர் செய்த நூல்களின் விரிவுரைகள், மறைபொரு ளாய் வைக்க வேண்டிய மந்திரங்கள், நாடக வ்ாயிலாக வெளியிட்ட கருத்துக்கள் முதலியவை கள் அவரால் இயற்றப்பட்டவைகளாகும்.

தமிழ்த் துறையிலும் இலக்கண முறையிலேயும் பேசும் குறள், வெண்பா, எழுசீர், எண்சீர், கோவை, பந்து, சுழல், ஏசல், அம்மானை முத லான பல முறைகளிலேயும் இவருடைய தமிழ் பாக்களைக் காணலாம். தமிழில் சுவை அறியாத வர்களுக்காகவே, வட மொழியில் இவர் பல நூல்களை இயற்ற வேண்டி வந்ததோ என்றே நாம் நினைக்க இடமுண்டாகும். இவ்வாசிரியர் ஆழ்வார்களிடமும், அவர்கள் மூலமாக வந்த தமிழ் மறை மதத்தின் சீர்மையையும் அவ்வாசிரி யர்களையும் பற்றிப் பேசுவதைக் கண்டால், தமிழ் மறையையே அவர் மனம் நாடியிருந்தது என்பது நன்கு புலனாகும். 'செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி, தெளியாத மறை நிலங்கள் தெளி கின்றோமே' என்கிறார் ஓர் இடத்தில். வேதத் திலேயிருந்து தெளிவு பெற முடியாத பொருள் கள் எல்லாம் ஆழ்வார்க்ள் பரமனுக்குச் சூட்டிய சொன்மாலைகளாலே தெளியலாம் என்பதே வேதாந்த வாசிரியரின் திருவுள்ளக் கருத்தாம்.

'தந்தையென நின்றதனி திருமால்தாளில்
தலைவைத்தோம் சடகோப னருளி னாலே'—

என்றார்.

தாம் சடகோபனைப் பற்றிப் பேசியதோடு நில் லாது மாறன் அடிபணிந்து உய்ந்தவர் மதுர கவிகள். வைணவர்கள் போற்றிப் புகழும் நம் மாழ்வாரை யோக முறையாலே நாத முனிகள் கண்டாரில்லை. நம்மாழ்வாரைப் பற்றி மதுர கவிகளால் செய்யப்பட்ட பதினொரு தமிழ்ப் பாடல்களை (மதுர கவிகளாய் இருந்தமையால்; மதுர கவிகள் எனப் பெயர் பெற்றார்) பன்னீ ராயிரம் தடவை மனனம் செய்து ஆழ்வாரைக் கண்டார் எனப் பெரியவர்கள் பகருவார்கள்.

மாண்புமிக்க நாத முனிகள், 'தூப்புலில் தோன்றிய தூய்மையாளரும் தமிழ் மறை தந்த வள்ளல்' 'நாளும் தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே' என்கிறார். 'பாவளரும் தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவோமே' என்று கூறி யிருப்பதனாலே தமிழின் சிறப்பு இவர் திருவாக்கி லிருந்து எவ்வாறு வெளியாகியுள்ளது என்பதை நன்கு அறியலாம். 'சந்தமிகு தமிழ் மறையோன் வேதாந்த குரு மொழிந்த பிரபந்தசாரம்' என்று பிரபந்தங்களின் சாரத்தைத் தாம் தரும் நூலின்



ஸ்ரீ விளக்கொளி பெருமாளும்
ஸ்ரீ வேதாந்த தேசிகரும்

முடிவிலே தன்னைத் தமிழ் மறையோன் என்று சொல்லிக் கொள்கிறார்:

'ஓதியுணர்ந்தவர்பால் அடிக்கடியுங் கேட்டு அயர்வு தீர்மினீரே' என்று பரோபதேசமாகப் பேசிய பேச்சின் அழகைப் பாருங்கள். இவர் தமிழில் செய்த பாசுரங்கள் அனைத்தும் சேர்த்து வெளிவந்திருப்பதுதான் தேசிகப் பிரபந்தம் எனப்படும். (தேசிகர் காலம்: கி.பி. 1268-1370) இப்பெரியவரை தேசிகன், தூப்புல் வேதாந்த தேசிகன்; கவிதார்க்கிக சிங்கம், ஸர்வ தந்திர ஸ்வதந்தரர் முதலான இன்னும் பல திரு நாமங்களாலும் கொண்டாடுகிறார்கள்.

எளிய வாழ்வையே விரும்பினவர் இப் பெருமான். மனதிலும் பொருளைப் போற்றாதவர். உஞ்ச விருந்தியை மிகத் தூய்மையான முறையில் நடத்திய உத்தமர், அரிசியுடன் இரத்தினங்களையும் கலந்து இட்டனர், சில பெண் திலகங்கள். இரத்தினங்களை நீக்கி அரிசியை மாத்திரம் எம் பெருமானின் திருவமுதுக்கு உபயோகித்தனராம்! அயிந்தைமா நகரில் கிணறு கட்டியுள்ளார்! பாதரட்சையும் தைத்துக் காண்பித்தாராம்! ஒரு சமயம், சில பொறாமைக்காரர்கள், பாதரட்சைகள் பலவற்றைக் கோத்துத் தோரணமாக இவர் வீட்டின் முன்புறம் கட்டித் தொங்கவிட்டனர். இவரோ அதைப் பெருமையாகப் பாவித்து, 'எமக்குப் பெரியோர் பாதுகைகளே நல் வழி காட்டிகள்' என்று போற்றினராம்!

பண்டொரு சமயம் ஸ்ரீ வரதன் பெரிய காஞ்சிக்கு பிரம்மோற்சவ காலத்தில் எழுந்தருளியபோது ஆழ்வார்களின் அருளிச் செயல்களை அங்கு வீதிகளில் பாடக் கூடாது என்று சில விரோதிகள் வாதிட்டனராம். நம் தேசிகன் அவர்களை நல்வழிப்படுத்தித் திவ்ய பிரபந்த கோஷ்டி நன்கு நடைபெற உதவி புரிந்ததாகப் பெரியோர் கூறுவர்.

# ஆசீர்வதிக்க வந்தவர்...



வினோபா ஆஸ்ரமத்திலுள்ள சில மாணிக்கங்களுள் ஒருவர். மற்றவர்கள் ஆஸ்ரமத்திலிருந்து ஆசீர்வாதம் பெற்றுப்போக வருவார்கள். ஆனால், இவர் ஆஸ்ரமத்தையே ஆசீர்வதிக்க வந்தவர். அன்னாருக்கு ஆண்டவன் நீண்ட ஆயுளை அளிக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனை.

—காந்திஜி.

16,000-ம் மைல்கள் நடந்து 53 லட்சம் ஏக்கரா நிலங்களையும், 1,038 கிராமங்களையும் தானமாகப் பெற்றுக்கொண்டு தமிழகம் வருகிறார் வித்தகர் வினோபாஜி.

"தமிழகம் தெய்வத் திருத்தலங்கள் நிறைந்த புண்ணிய பூமி. எங்கு நோக்கினும் காட்சி அளிக்கும், விண்ணையளாவிடும் கோவில்களும், கோபுரங்களுமே தமிழர்களின் அறவாழ்விற்குச் சான்றுகளாகும். அரசியல் போரில் முன்னணியில் இருந்து வெற்றி கண்டதைப்போல பொருளாதார சமூகப் புரட்சியிலும் பின்வாங்காது. எனவே, பூமிதான இயக்கத்திற்கு தமிழ்நாட்டில் மகத்தான ஆதரவு கிடைக்கும்" என வந்துள்ள வினோபாஜி அவர்களின் எண்ணம் ஈடேற இறைவனை வேண்டுகிறோம்.

—CONGRESS SEITHI

**Space donated by Dr. M. K. Srinivasan, President Kancheepuram Town Bhoodan Prachar Committee, Eighth All India Sarvodya Sammelan.**

# சொன்ன வண்ணம் செய்த பெருமாள்

## (Chonnavannam Saitha Perumal)

"விண்ணேரின் வேலையா? அல்லது மண்ணேரின் வேலையா? பல்லவ மன்னனின் பணியாட்கள்தான் இக்கலைச் சின்னங்களை எழுப்பினர்களா? அல்லது பரமசிவனின் பூதகணங்களே இக்கூடங்களை எழுப்பிவிட்டனவா?" என்றெல்லாம் கூறி மூக்கின்மேல் விரலை வைத்து வியப்படைகின்றனர் யாத்ரீகர்கள், கஞ்சிக் கூடங்களைப் பார்த்து!

கல் தச்சர்களின் கை வேலையைப் பெற்ற இக் காஞ்சி, சென்னைமா நகரத்திற்குச் சுமார் நாற்பத்தைந்து மைல் தொலைவில் தென் மேற்கில், பிரகாசிக்கும் மணிப்பெட்டியென அமைந்துள்ளது. இம்மூதூரைப் பற்றி கி. மு. 2-ம் நூற்றுண்டில் பதஞ்சலி முனிவர் இயற்றிய மகா பாஷ்யத்தில் காணப்படுகிறது. ஐம்பெருங் காப்பியங்களில் சீழ்த்தலைச் சாத்தனூர் என்பவர் இயற்றிய மணிமேகலை என்ற நூலிலிருந்தும் உருத்திரங்கண்ணனூர் என்னும் புலவர் இயற்றிய பெரும்பாணுற்றுப் படையிலிருந்தும் நாம் காஞ்சியின் மேன்மையை அறியலாம்.



ஸ்ரீ யதோத்தகாரிப் பெருமாள்

ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற 18திருப்பதிகள்,வைஷ்ணவத் திருப்பதிகள் உள்ளன இங்கு. இத்திருப்பதிகளில் யதோத்தக்காரிப் பெருமாள் கோவில் புராதனமானதும், போற்றப்படுவதுமான ஓர் அழகிய கோவில்.இஃது சுமார் 7-ம் நூற்றுண்டிற்கு முன் கட்டி முடிக்கப்பட்டிருக்க வேண்டுமென வரலாற்று நூல் கூறுகிறது. ஆலயத்தை செப்பனிட்டு மணியெனப் பாதுகாத்து வருகிறுர்கள் இன்றும்.

### கோயிலின் உத்பத்தி

இந்நகரில் எக்கோவிலுக்கும் ஒவ்வோர் புராண வரலாறு உண்டு. அவ்வரலாறுகள் எவ்வளவு தூரம் உண்மையென்பதை ஆராய்வதைவிட, அவ்வரலாறுதான் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதே சிந்தனையாளர்களின் இயல்பு.

பிரம்ம தேவனின் மனம் மாசு படிந்தது ஒரு சமயம். மாசு படிந்ததினுல் மண் படைப்பு மங்கியது. உணர்ந்து கொண்டார் பிரம்ம தேவன். உள் அழுக்கு அழிய, கங்கைக் கரையோரம் கடுந்தவம் செய்தார். திடீரென ஒரு நாள் அவர் காதில் ஏதோ சில ஒலிகள் எழுந்தன. கூர்ந்து கேட்டார். மாசு ஒழிய, உள்ளம் தூய்மை யடைய, ஓர் ஆயிரம் வேள்விகள் புரியவேண்டும். அப்பொழுதே தொலைந்தது உன் மாசு, ஆனுல் ஆயிரம் யாகங்கள் உன்னுல் உன்னுடைய ஆயுட்காலத்திற்குள் செய்து முடிக்க முடியாது. ஆகையால் காஞ்சிக்குச் செல். அச்சத்திய விரத க்ஷேத்திரத்தில் ஒரு வேள்வி செய்தால் ஓர் ஆயிரம் வேள்வி புரிந்ததற்கு ஒப்பாகும் என அவ்வொலி-அசரீரி-கூறிற்று. தெரிந்து கொண்டார் பிரம்மா.

### பிரம்மாவின் வேள்வி

காஞ்சிமா நகரில் வேள்வி குண்டத்திலிருந்து விண்ணுடன் விளையாடுவதுபோல் அக்னிச் சுவாலை எரிந்துகொண்டிருந்தது. பிரம்மா மற்ற முனிவர்களுடன் வேள்வியை இனிதே நடத்திக் கொண்டிருந்தார். பிரம்மாவினுடைய மனைவி

சரஸ்வதிக்கு ஓரே கோபம். கணவனின் பொல்லாமையும், அதையொழிக்க வேள்வியும் செய்து கொண்டிருப்பதையும் கேள்விப்பட்ட வெள்ளைக் கமலத்தரசி வெறுப்படைந்து வேகவதி என்ற பெரிய ஆருய்ப் பரிணமித்து யாகத்தை அழிக்க முற்பட்டாள். பிரம்மா தவித்தார். ஆண்டவனை வேண்டினர். மகாவிஷ்ணு யதோத்தகாரியாக வந்து நிர்வாணமாக வேகவதிக்குக் குறுக்கே சயனித்துக்கொண்டார். வேகவதி வெட்கமடைந்து விட்டாள். (இக்கூற்றை இக்கோயிலில் இன்றும் பார்க்கலாம்.)

பிரம்மாவின் யாகம் பூர்த்தி பெற்றது. குண்டத்திலிருந்து பல்லாயிரம் சூரியர் ஒளியொப்ப வரத ராஜர் தோன்றினர். (யதோத்தகாரி தோன்றிய ஏழாம் நாள்தான் வரதராஜர் தோன்றினர். யதோத்தகாரியின் திரு நட்சத்திரம் சித்திரை மாதத்தில் புனர்வசு. தேவப்பெருமாளுக்கு திரு நட்சத்திரம் அஸ்தம்) ஆகையினல் பக்த கோடிகள் ஸ்ரீ யதோத்தகாரியை உபாயமாகவும் ஸ்ரீ தேவ ராஜப்பெருமாளை உபேயமாகவும் கருதிப் பூசிக்கிருர்கள்.

ஆழ்வார்களில் பக்தி மார்க்கத்தையும், விசிஷ்டாத்து வைதத்தையும் ஸ்ரீ இராமானுஜருக்கு முன்பே (கி. பி 1017 1137) ஜனங்களுக்குப் போதித்த ஸ்ரீ பொய்கை யாழ்வார் காஞ்சிக்கு அருகே அவதரித்தவர். அவர் இப்பெருமாளைப் பற்றி அநேக பாசுரங்கள் பாடியிருக்கிருர்.

இப்பெருமாளைப்பற்றி ஆழ்வார்களில் தலையாய நம்மாழ்வார் பல பாசுரங்கள் பாடியிருக்கிருர். வேதாந்த தேசிகருடைய உறவினரும் குருவுமாகிய ஸ்ரீ இராமானுஜப் பிள்ளான் என்பவர் இக் கோயிலை யடுத்த முதல் வீட்டில் குடியிருந்தார் என்றும், அவ்வேதாந்த தேசிகர் அவரிடமிருந்து அக்கிரகத்தில் காலட்சேபம் செய்தார் என்றும் கூறுகிருர்கள். ஸ்ரீ மணவாள மாமுனிகள் இக் கோவிலில்தான் தம்முடைய பாஷ்யத்தை சுமார் ஒரு வருட காலம் பிரசங்கம் செய்தார்.

### பெயர் வந்த காரணம்

யதோத்தகாரி என்னும் சொல்லிற்கு சொன்ன படி செய்யவர் என்பது பொருள், இப்பெருமாளை 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்றும் கூறுவர்.

திருமழிசை ஆழ்வார் ஸ்ரீ யதோத்தகாரிக்குக் கைங்கர்யம் செய்துக் கொண்டிருக்கும் பொழுது கணிகண்ணன் என்னும் ஒரு சிறந்த பக்தன்—கவிஞன்—அவருக்கு உதவியாக இருந்தான். இந் நாட்டு அரசர் சபையில் பல ஆண்டுகளாய்ச் சிறு வயதிலிருந்து அடியாளாய் இருந்த ஒரு கிழமாது, கணிகண்ணனிடம் மிகுந்த பக்தியுடன் இருந்தாள். இரக்கங்கொண்ட கணிகண்ணன் அவளுடைய முதுமையைக் களையும் பொருட்டு ஸ்ரீ யதோத்த காரியினிடம் சில பாசுரங்கள் பாடி, அவளுக்கு இளமை அளிக்குமாறு வேண்டினர். உத்தம பக்தனின் வேண்டுகோட்கு இணங்கி அக்கிழ மாதை இளமங்கையாக மாற்றினர்.

வேந்தன் செய்தியை அறிந்தான்; வியப்புற்ருன். தன் முதுமையை நினைத்தான், வருத்தமுற்ருன் கூப்பிட்டான் கவிஞன் கணிகண்ணனை. உன் உதவி தேவை. முதுமையை ஒழி இளமையை அழை என்ருன். மன்னனின் மமகாரச் சொல் மதி படைத்த கவிஞனிடம் நிறைவேறவில்லை. கேட்டவர்களுக்கெல்லாம் இளமையளிக்க ஆண்டவன் அவ்வளவு எளிதில் ஒப்புவானே வேந்தா! அவன் பாதத்தை பூசிப்பவருக்கும் இளமை பாக்கியம் கிட்டுவது அரிதாயிற்றே என்று மறு சொல் கூறினன் பக்தசிகாமணி கணிகண்ணன்.

யான் செய்வதைவிட அக்கிழவி எந்த விதத்தில் உயர்வாக பூசை செய்கிருள்? அவளுக்கேன் இளமை என்று வெகுண்டு கேட்டான் மன்னன்.

கிழவிதான் அவள். ஆனல் கடவுள் வழிபாட்டில் என்றென்றும் குமரியாகவே இருக்கிருள். உள்ளம் குமரியாய் இருந்தாலும் வெளியுடல் பூசைக்குத் துன்பத்தை அளிப்பதாய் இருக்கிறது. ஆதலால் எந்நேரமும் ஆண்டவனைப் பிரார்த்திக்க வேண்டி அவளது உடலையும் இளமையாக்கினர் கடவுள். வெளி விவகாரங்களில் மனத்தை நிறுத்தியிருக்கும் உன்னைப்போன்ற மன்னர்களுக்கு இளமை கிடைக்காது மன்ன! என்று பதிலிறுத்தான் கணிகண்ணன்.

கணிகண்ணனின் கண்ணியப் பேச்சு காவலனின் காதில் விழவில்லை. கடுஞ்சினமே புறப்பட்டது. கணிகண்ணன் காடு கடத்தப்பட்டான்.

கணிகண்ணனேடு, குருவாகிய திருமழிசை யாழ்வரும் சீடனைப் பிரிய மனமின்றி கூடவே செல்ல நினைத்தார். அதனல் யதோத்தகாரியைப் பிரிய நேரிடுமே என்று வருந்தினர். பெருமாளைப் பார்த்து பின்வரும் பாசுரத்தைப் பாடினர்:

" கணிகண்ணன் போகின்ருன்,
காமருபூங்கச்சி, மணிவண்ணு
நீ கிடக்க வேண்டா—துணிவு
டைய செங்நாப்புலவனும்
போகின்றேன், நீயும்
உன் தன் பைங்நாகப்பாய்
சுருட்டிக்கொள்."

இப்பாசுரத்தைப் பாடியவுடன் திருமழிசையாழ்வாரும் கணிகண்ணனும் சென்ற வழியே பெருமாளும் தன் படுக்கையைச் சுற்றிக்கொண்டுநடக்க ஆரம்பித்தார். இறைவன் சென்றவுடனே நகர் இருள் அடைந்தது. முழுச் சூரிய கிரகணமோ இங் நாள் என பலர் ஐயுற்றனர். மக்கள் முறையிட்டனர் மன்னனிடம். அப்பொழுதுதான் சீடர்களுடைய சக்தியை யுணர்ந்தான் காஞ்சிக் காவலன். அவர் களை அழைத்து வர ஓடினுன்.

அவ்வேளை இறைவனும் அவனுடைய அடியார்கள் இருவரும் பாலாற்றின் கரையில் உள்ள ஓர் இடத்தில் தங்கியிருந்தார்கள். (அவ்விடத்திற்கு இன்றும் ஓரிருக்கை என்று பெயர்) வேந்தன் வேண்டுகோளுக்கிணங்கி கணிகண்ணன் அரசனை மன்னித்து திருமழிசை ஆழ்வாரை நோக்க, திருமழிசை ஆழ்வார் பெருமாளைப் பார்த்து பின்வரும் பாடலைப் பாடினுர்.

" கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமருபூங்கச்சி மணிவண்ணு, நீ கிடக்க
வேண்டும்—துணி வுடைய
செங்நாப்புலவனும் போக்
கொழிந்தேன் நீயும் உன் தன்
பைங்நாகப்பாய் படுத்துக்கொள்"

•

பெருமாளும் ஆழ்வாரின் இறைஞ்சுதலுக்குட் பட்டு காஞ்சிக்குத் திரும்பினுர். இன்றும் தை மாதத்தில் மக நட்சத்திரத்தில் ஓர் உற்சவம் நடக்கிறது இக்கோவிலில். அன்று பெருமாளையும் திருமழிசையாழ்வாரையும் ஓரிருக்கைக்கு எழுந்தருளச் செய்து திருப்பிக்கொண்டு வருகிருர்கள்.

இத்தலத்திற்கு வரும் யாத்ரீகர்கள் பாடல் பெற்ற இக்கோவிலை—சொன்ன வண்ணம் செய்த பெருமாளை—காணுமற் செல்வதில்லை.



# சித்திர குப்தர் கோயில்

## (Chitragupthar Temple)

அன்று தொட்டு இன்றுவரை அயல்நாட்டி லிருந்து அநேகர் தென்னிந்தியாவிற்கு வந்துவிட்டுப் போவது தென்னாட்டின் தனிப்பெருஞ் செல்வங்களாகிய கோவில்களுக்காகத்தான்; அக் கோயில்களில் காணப்படும் கலைச்செறிவைக் கண்ணுறுவதற்காகத்தான், யவனவர்கள் இந்நாட்டிற்கு வருகின்றனர்.

இத்தகைய ஆலயங்கள் நிரம்பப் பெற்றது காஞ்சிமா நகரம். 'முக்திதரும் நகரேழில் முக்யமாம் காஞ்சி' என்ற புகழோடு பல்லவர்களுக்குத் தலைநகராயிருந்த பெருமையையும் உடைத்தது இக்கச்சியம்பதி. இது சென்னைக்குத் தென்மேற்கே நாற்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ளது. இக்காஞ்சி மாநகரை ஆண்ட பல்லவர்களும், சோழர்களும்,விஜயநகரத்தரசர்களும், தொண்டைமான் அரசர்களும் அநேக ஆலயங்களை கட்டியிருக்கின்றனர். பல்லவர்கள் ஆண்ட காலத்தில், "யுவான் சுவாங்" என்னும் சீன யாத்திரிகர் யாத்திரையின் போது பல குறிப்புக்களின் வாயிலாக கச்சியின் பெருமையை, எல்லா துறைகளிலும் மேம்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

காஞ்சிக்குச் செல்லும் யாத்திரிகர்கள் மிகவும் பழமையான கீர்த்தி வாய்ந்த ஆலயங்களான, ஸ்ரீ வரதராஜர், ஸ்ரீ ஏகாம்பரநாதர், ஸ்ரீ காமாட்சியம்மன், ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீ வைகுண்ட பெருமாள், ஆகிய தலங்களுக்குச் செல்கிறார்கள். ஆனால் இக்கச்சியம்பதியில் மற்றும் சைவ, வைணவ ஆலயங்கள் பல இருக்கின்றன. அவைகளில், அநேக வைணவ ஆலயங்கள் ஆழ்வார்களால், "மங்களா சாசனம்" செய்யப்பெற்றவை. அநேக சிவ ஸ்தலங்கள் நாயன்மார்களால் பாடப்பெற்றவை. இதைத் தவிர இன்னும் முக்கிய கோயில்களும் உண்டு. அவைகளுள் ஒன்று ஸ்ரீ சித்திர குப்தன் கோயில் ஆகும். இது சைவ வைணவர்களுக்குப் பொதுவானது. தென் இந்தியாவிலேயே சித்திரகுப்தருக்கு இக்காஞ்சிமா நகரத்தில் தான் கோயில் உள்ளது. இக்கோயில் ஸ்ரீ கைலாஸநாதர் 'கோயிலுக்கும், ஸ்ரீ வைகுண்ட பெருமாள் கோயிலுக்கும் நடுவில் தென்னண்டை ராஜ வீதியில் அமைந்துள்ளது. இக் கோவிலானது சென்னிய சோழ அரசர் காலத்தில் துலாபார மண்டபம் கனகராயர் என்பவரால் கட்டப்பட்டது.



ஸ்ரீ சித்திர குப்தர் சுவாமி

சித்திரகுப்தர் கேது கிரகத்தின் தலைமைத் தெய்வம். இத்தெய்வம் பூலோகத்தில் மனிதர்கள் செய்யும் நற்காரியங்களையும், தீச்செயல்களையும் கணக்கெழுதுகின்றார் என்பது கர்ணபரம்பரை வரலாறு. இவ்வுலகில் ஒருவர் இறந்தவுடன் அவருடைய ஆத்மா யமபுரிக்கு முதலில் செல்வ

தாக இந்துக்களின் கொள்கை. அங்கே எமன் பத்து நீதிபதிகளுடன் அரச சபையில் வீற்றிருக்கின்ருன். அங்கே ஒருவருடைய ஆத்மா வந்தவுடன் சித்திரகுப்தன் என்னும் தலைக்கணக்காயனுர் அம்மனிதன் பூலோகத்தில் செய்த நன்மை தீமைகளை எடுத்து கூறுகிருர். சித்திரகுப்தனுர் எப்பொழுதும் உண்மையினையே பேசுவார் என்பதும் காலப்போக்கிலே வந்த கதை. பத்து நீதிபதிகளைக் கலந்தாலோசித்து அவ்வாத்மாவுக்கு நரகமோ, சொர்க்கமோ, செல்ல அனுமதியளிக்கிருர் எமன் என்பதும் இந்துக்களின் திடமான நம்பிக்கை,

இக் கோயில் மூலத்தானத்தில் உள்ள சிலையானது ஒரு கரத்தில் பனையோலைச் சுவடியும், மற்ருெரு கரத்தில் இரும்பு எழுத்தாணியுடனும், வீற்றிருக்கிருர். இக் கோயிலில் இரண்டு கால பூஜை நடைபெற்று வருகிறது. பிரதிவருடமும் சித்ரா பௌர்ணமி அன்றுகாலை மஹாபிஷேகமும் மாலையில் திருக்கல்யாணமும் நடைபெறுகின்றது. இது ஒரு பிரார்த்தனைத் தலம். இவருடைய தேவியாரின் பெயர் கர்ணும்பிகை.

## புராண வரலாறு

ஒருநாள் சிவபெருமான் கயிலையங்கிரியல் உமையாளுடன் வீற்றிருக்கும்போது, உலகத்தில் மானிடர்கள் செய்யும் நன்மை தீமைகளைக் குறிப்பெடுக்க வேண்டியது அவசியமென நினைத்தார். உடனே அவர் பார்வதியைக் கூப்பிட்டு ஒரு தங்க பலகையைக் கொணர்ந்து தரச் சொன்னுர். அவ்வண்ணமே நடந்த பின் பரமசிவன் அப்பலகையில் ஒரு சித்திரத்தை வரைந்தார். பார்வதி பரமசிவனை அச்சித்திரத்திற்கு உயிர் கொடுக்குமாறு வேண்டினுர். அவரும் அவ்வண்ணமே உயிரீந்தார். சித்திரத்தினின்றும், உயிர் பெற்றதால் சித்திரகுப்தன் எனப் பெயரிடப்பட்டது. சிவபிரான் சித்ர குப்தனை உலகில் மானிடர் புரியும் நன்மை தீமைகளைக் கணக்கெழுதி யமனை அவர்களை சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ அனுப்ப உதவியாக வேலை செய்யும்படி கட்டளையிட்டார். அப்பணியை இன்னும் சித்திர குப்தன் செய்து வருவதாக மக்கள் நம்பி வருகின்றனர்.

## மற்ருெரு வரலாறு

சித்திர குப்தன் காமதேனுவிடத்தில் பிறந்ததாக ஒரு கதை கூறப்படுகிறது. தனக்குக் குழந்தைப் பேறு இல்லையே என்று வருந்திய இந்திரன் இந்திராணியுடன் சிவபிரானிடம் சென்று முறையிட அவன் வேண்டுகோளுக்கிணங்கி சித்திரகுப்தனை இந்திராணியின் வயிற்றில் பிறக்கும்படி கட்டளையிட்டார். ஆனுல் இந்திராணிக்கு அப்பிறப்பிலே பிள்ளைப் பேறில்லை என்று அறிந்தவுடனே காமதேனுவின் வயிற்றிலே பிறக்கும்படி பணித்தருளிவிட்டு காமதேனுவையும் இந்திரனிடத்தில் அனுப்பிவிட்டார். அவ்வாறே சித்திரா பௌர்ணமியன்று காமதேனுவின் வயிற்றில் குப்தனுதித்தார். சீர் சிறப்புடனும், அன்புடனும், அறத்துடனும், அக்குழந்தையை வளர்த்து வரலானுர். பின்னர் சிவபெருமானின் ஆணையின் படியே யமனிடத்தில் இக்கணக் கெழுதும் வேலையை மேற்கொண்டார்.

சித்திரகுப்தர் சூரிய பகவானுக்கும் நீலா தேவிக்கும் புத்திரர் என்றும் ஒரு சாரார் கூறுகிருர்கள்.



# சத்திய விரதேஸ்வரர் ஆலயம்

## (Sathya Viradeswarar Temple)

'க இதி ப்ரம்ஹணோ நாம,
தெந தத் ராஞ்சிதோ ஹரி;
தஸ்மாத் "காஞ்சி" தி விக்யாதா,
புரீ புண்ய விவர்தனீ"
—பிரம்ம புராணம்.

க என்ருல் பிரம்ஹா; அஞ்சுதல் என்ருல் பூஜித்தல், அவர் ஸ்ரீஹரியைப் பூஜித்த இடமாகையால் புண்யத்தை வளர்க்கும் இந்நகருக்குக் "காஞ்சி" எனப் பெயர் வந்தது.

தென்குமரிக்குத் தெற்கிலிருந்த "இலேமுரி" முதலான 49 நாடுகளேயும் கடல் கொள்ளுமுன் நம்து பாரதமாதாவின் இடையில் "காஞ்சி" என்ற ஒட்டியாணம் நடுநாயகமாக விளங்கப் பெற்றதால் இது "காஞ்சிபுரம்" எனப் பெயர் பெற்றது என்பர். ஒரு காலத்தில் இது பொன்மயமாக மின்னியபடியால் "காஞ்சனபுரம்" என்ற பெயர் பெற்றுப் பிறகு "காஞ்சீபுரம்" என மருவிற்று. பண்டைக் காலச் சங்கத் தமிழ் நூல்களில் இந்நகரைப் "பொன் எயிற் காஞ்சி"; பொன்னகர் காஞ்சி எனக் கூறப்பட்டிருக்கிறது. இது ஒரு காலத்தில் "காஞ்சி" மரங்கள் நிறைந்த காடாக இருந்து பிறகு நகரமாக்கப்பட்டதால் இதற்குக் "காஞ்சிபுரம்" என்ற பெயரிடப்பட்டதாகவும் கூறுவர் ஒரு சாரார். தமிழில் "கச்சி மாநகர்" என்ற பெயரும் உண்டு இதற்கு.



பூஜையில் இல்லாத வநாயகப் பெருமான்

இவ்வுலகிலே நாம் ஏதேனும் ஓர் பலனே அடைய விரும்பினுல் அதற்கு வேண்டிய வழியே அலாதியாய் நிற்கும் ஆயின் ஆன்மீக உலகில் உட்பட உண்மை அதுவாய்த் தோற்ருது. ஆண்டு, செய்கையும் செய்வினேயும் ஒன்ருய் நிற்றல் காண்க. ஆண்டவன் யாவற்றையும் கடந்து நிற்றலால் அவரை நண்ண திண்ணமான வழி அவரேயாம், ஆண்டவனே ஏகமனதாக துதித்தற்பாற்று எனப் பண்டைப் பெருமக்கள் கூறுகின்றனர், இதுவே ஒவ்வொரு மதத்தின் சாரமும் ஆகும். சமஸ்கிருத வழக்கு கூறும் சத்திய விரத க்ஷேத்திரம் எனும் காஞ்சியில் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே நிலே நாட்டப்பெற்ற உண்மையும் ஈதே.

இக்காஞ்சி மாநகரத்தில் சிறப்பு வாய்ந்த பல ஆலயங்கள் உள்ளன. பல்லவர்கட்குத் தலேநகராயிருந்த பெருமையையுடைய கச்சியம்பதி சென்னேக்குத் தென்மேற்கே 45 கல் தூரத்தில் உள்ளது. இப்பெருமை பொருந்திய காஞ்சியின் கிழக்குப் பக்கத்தில் "சத்திய விரதம்" எனும் தலம் ஒன்றுளது. அங்கு காமாட்சியம்மையாரோடு சத்திய விரதேசப்பெருமாள் எழுந்தருளி இருக்கிருர். தற்சமயம் அதற்கு "திருக்காளத்திமேடு" எனப்

பெயர் வழங்குகிறது. இந்த இறைவனைப் பற்றி சம்பந்தமூர்த்திநாயனுர் 10பாசுரங்களினுல் கிடைத்தற்கரிய தேவாரத்தில் போற்றிப் பாடியுள்ளார்.

இக்கோவிலின் அருகாமையில் "சத்திய விரத தீர்த்தம்" என ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதில் புதன்கிழமையில் ஸ்நானம் செய்து சத்திய விர தேஸ்வரரைத் தரிசித்தவர்கள் இம்மையில் மனைவி மக்கள், பூமி, கல்வி, செல்வம் முதலியவற்றையும் மறுமையில் இருவினையும் நீங்கப் பெற்று முக்தியையும் அடைவார்கள் என்பது பெரியோர்களுடைய நம்பிக்கை, இத்தலத்திற்கு இந்திரபுரம் என்றும் தீர்த்தத்திற்கு இந்திர தீர்த்தம் என்றும் வழக்கிருத்தல் காண்க.

## ஸ்தல புராணம்

முன்னெரு காலத்தில் சிவி எனும் பெயருடைய இந்திரன் ஒருவன் இருந்தான். அவன் சந்தோஷம் நிரம்பிய இந்திரலோக ஆட்சியை வெறுத்து மோட்சம் அடைவதற்கான வழியில் ஈடுபடலாலானுன். உடனே அவன் தன் குருவாகிய பிரகஸ்பதியரிடம் சென்று "நிலையில்லாத இவ்வுலக இன்பத்தையே அனுபவித்து கெட்டொழிந்தேன். பள்ளங்களில் உள்ள நாற்றம் பொருந்திய சேற்றில் விழுகின்ற பன்றியைப் போல, பொய்யான இவ் வாழ்க்கையில் கிடந்து துன்பத்தை அனுபவித்தேன். இத்தகைய அழியும் வாழ்வை இனி நான் விரும்பேன், முக்தி பெறுதற்குரிய வழியை எனக் கருள வெண்டும் என்று இறைஞ்சினுன்.

மெய்யுணர்வு பெற்று முக்தியை அடைய விரும்பின சிவியைப் பார்த்து "தேவேந்திரனே! நீ கேட்ட முக்தியை சிவபெருமான் ஒருவரேயன்றி வேறு யாராலும் கொடுக்க முடியாது. ஆகவே மனத்தினுலும் பிறரை நினையாது அச்சிவ பெருமானையே வழிபட்டால் முக்தியை அடைவாய் என்ருர். உடனே இந்திரன் சிவபெருமானை எவ்விடத்தில் எவ்வாறு வழிபட வேண்டும் என்று சொல்ல வேண்டினுன். அதற்கு வியாழ பகவான் "இந்திர! பூவுலகில் காஞ்சி எனும் திருத்தலம் ஒன்று உள்ளது. அதற்குக் கிழக்கே சத்திய விரதம் எனும் ஓர் தலம் இருக்கிறது. அங்கு சத்திய விரத ஈஸ்வரர் எனும் பெயருடன் பெருமான் எழுந்தருளியிருக்கிருர். அங்கு சத்திய விரத தீர்த்தம் என ஒன்றிருக்கிறது. அத்தலமடைந்து அத்தீர்த்தமதில் முழுகி திருவெண்ணீறும் உருத்திராட்ச மாலையும் அணிந்து நல்லொழுக்கத்துடன் ஈசனை வழிபட்டு முக்தி அடைவாயாக" என்ருர்.

மேலும் வியாழ பகவான் "இந்திர! நீ முற்பிறப்பில் அத்தலத்தில் உள்ள தீர்த்தத்தில் மூழ்கியே இப்பதவியைப் பெற்ருய்; அத்தீர்த்தத்தில் ஒருமுறை மூழ்கியவர்கள் இந்திர பதவியையும் இருமுறை மூழ்கியவர்கள் பிரம்ம பதவியையும் மும்முறை மூழ்கியவர்கள் முக்தியையும் அடைவார்கள்" என்ருர்.

## புதன்கிழமை விசேஷம்

சந்திரனுக்குத் தாரகையினிடமாகப் பிறந்த புதன் என்பவன் கிரக நிலையை அடைதல் பொருட்டு, அத்தீர்த்தத்தில் மூழ்கி பெருமானை நோக்கி தவம் செய்தான். சத்திய விரத ஈஸ்வரர் மகிழ்ந்து அவனுக்குக் காட்சி அளித்தார். புதன் ஆனந்த பரவசனுகி "அடியேன் என் தந்தையைப் போல் கிரக நிலையை அடையவும், எனது கிழமையில் தீர்த்தத்தில் மூழ்கினேர் முக்தியடையவும் அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினுர். சிவபெருமான் அவ்வாறே வரமளித்து மறைந்



பூஜையில் இல்லாத ஆறுமுகக் கடவுள்

தருளினர். அன்று முதல் அத்தீர்த்தத்திற்கு புதன் கிழமை சிறப்புடைத்து.

இந்திரன், இதுகேட்டு குருவினிடம் அரசாட்சியை ஒப்படைத்துவிட்டு, காஞ்சிமாநகரில் உளதாய சத்திய விரதத்தை நண்ணி தீர்த்தமதில் மூன்று வேளையும் நீராடி, திருவெண்ணீறும், கண்டிகையுமணிந்து பெருமானை நோக்கிக் கடுந்தவம் புரியலானன்.

பெருமான் அவனது பக்தியைக் கண்டு பெருமாட்டியோடு விடை மீது வந்து காட்சி கொடுத்து இந்திரனுக்கு முக்தியளித்தார். அவன் வேண்டுகோளின்படி அத்தலத்திற்கும் அவனது பெயரே



தக்ஷிணமூர்த்தி

விளங்கும் என வரம் அருளி லிங்கத்தில் மறைந்தருளினர்.

இது திருக்கச்சியில் காரை வனத்தில் அமைந்ததாதலின் "திருக்கச்சி நெறி காரைக்காடு" எனப் பெயர் வந்தது.

இத்தலத்தில் உள்ள இரண்டு சிலைகள் காண்பாருளமதைக் கவர்வன.

(1) தட்சிணமூர்த்தி. இங்கே சிவபிரானைக் கயிலயங்கிரியில் அமர்ந்த திருக்கோலத்துடன் தனது வலது காலை முயலகன் என்னும் துன்மார்க்கனின் உடலில் அழுத்திய கோலத்துடனும், தன் இடது காலை காலின் மேல் வைத்த கோல்த்துடனும் காணலாம். அவரது வலது கைகளில் சின்முத்திரையும் சர்ப்பமும் இடது கைகளில் அக்னியும் சுவடியும் இருக்கக் காணலாம். அவரது தலைக்கு மேல் கல்லால மரமும் அவரது கால்களுக்குக் கீழே சனகாதி யோகிகளையும் நந்தியையும் உட்கார்ந்துள்ள கோலத்தில் காணலாம்.

மற்றுமோர் இடத்தில் சிவபிரான் விசுவரூபம் எடுத்து நிற்க பிரம்மா அன்னபட்சியின் உருவத்துடனே அவரது திருமுடியைக்காண விரைந்து செல்லும் கோலத்தையும், சிவபெருமானின் திருவடிகளைக் காண மகாவிஷ்ணுவராக ரூபத்துடன் செல்வதையும் தரிசிக்கலாம்.

தற்சமயம் பின்னமான ஆறுமுகக் கடவுள், விநாயகர் சிலைகளையும் கோவிலின் ஓர்புறத்தேயுள்ள மரத்தடியில் காணலாம். இவை இக்கோயிலில் சுமார் 2000 வருடங்கட்கு முன் பூசையிலிருந்ததாகக் கருதப்படுகிறது.

இக்கோயிலை சமீப காலத்தில் பெரும் பொருள் செலவழித்து நாட்டுக்கோட்டைச் செட்டிமார் செப்பனிட்டுள்ளார்கள். ஆயின், கோயில் முழுதும் செப்பனிட்டாகவில்லை. எக்காரணம் பற்றியோ வேலை குறையாக நின்றுவிட்டது. இக்கோவிலில் இருகாலம் பூசை செவ்வனே நடைபெற்று வருகிறது.

# ஸ்ரீ கைலாசநாதர் ஆலயம்

## (Sri Kailasanathar Temple)

காஞ்சிக்கு மேற்கு திசை ஆங்கு ஒரு சிறு பகுதி; சுற்றிலும் பச்சைக் கடலென நினைக்கச் செய்யும் வயல் வெளிகள். சிற்றெறும்பு செல்லும் ஓசையும் கேட்கும் அளவிற்கு ஏகாந்தமான இட அமைப்பு. அதோ! எல்லாவற்றிற்கும் நடுவே கலைப் பெட்டியாய்-சிறந்த மன்னனுடைய பெரிய கோட்டையாய் திகழ்கின்றதே அது தான் கைலாசநாதர் ஆலயம்.

### இராஜசிம்மன் பணி

எட்டாம் நூற்றுண்டு ஆரம்பம். அதோ அந்த இடத்தில் மக்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து என்ன கட்டிக் கொண்டிருக்கிறுர்கள்? வீடா? மாளிகையாக இருக்குமோ? இருக்கவே இருக்காது! மாளிகையாக இருந்தால் அந்த கல் தச்சர்கள் எதற்காக எட்டு முகப்புக் கல் லிங்கங்களை நிறைய செதுக்கிக் கொண்டிருக்கவேண்டும்? ஆகையால் இது கோயிலாகத்தான் இருக்க வேண்டும்! அதோ பிரதானி. அவர் பக்கத்திலே நிற்பது யாரது? ஓ, மன்னன் இராஜ சிம்மனு? சந்தேகம் எதற்கு? கண்ணை விழித்துக் கொள்ளுங்கள். சரித்திரத்தைப் பிரியுங்கள், கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டியவன் யார் என்று தெரிகிறதா? எட்டாம் நூற்றுண்டில் உலாவின பொழுது ஒரு மன்னனைக் கண்டோமே, அதே மன்னன் இராஜ சிம்மனே தான்.

இக்கோயிலினுள் இருக்கும் இறைவனுக்கு மேற்படி வேந்தன் முறையாகப் பூஜை செய்து வந்ததாகச் சிலர் கூறுவர். இக்கோயிலிற்கு 'இராஜ சிம்ம ஈசுவரக் கிரஹம்' என்ற பெயரும் உண்டாம்.

### புராண வரலாறு

பழைய நூல் என்ன கூறுகின்றது என்று பார்ப்போம். தென்னிந்தியாவை திரிபுரத்தவர் என்று மூன்று அசுரர்கள் அரசு புரிந்து வந்தார்கள். அவர்கள் சிறந்த சிவ பக்தர்கள். அவர்கள் அரக்கருமாதலால், தேவர்களுக்குக் கடுமையான கொடுமைகள் செவ்வனே செய்து வந்தார்கள். அலறினர்கள் தேவர்கள். எவரிடம் சென்று முறையிடுவது என்று சிந்தனை செய்தார்கள். சிந்தனை சிதறியது. ஓடினர்கள் திருமாலிடம். கூறினர்கள் தங்கள் துன்பத்தை. அரக்கர்களை அழித்துஆதரவு



மகேந்தர வாமன் பிரதிஷ்டை செய்த பதினறுமுகம் கொண்ட பெரிய லிங்கம்

தர வேண்டுமென்று வைகுந்தம் கிடுகிடுக்கும்படி கூக்குரலிட்டார்கள். திருமாலும் செவி சாய்த்தார்.

'அரக்கர்கள் சிறந்த சிவ பக்தர்கள் ஆயிற்றே. அவர்களை எச் சூழ்ச்சியால் அழிப்பது?' என்று ஆலோசித்தார் மணிவண்ணன் பலன் கிடைத்தது. நூதன கிரந்தத்தை உண்டாக்கினர். அதில் வேதங்கள் எல்லாம் குறைபாடுகள் உள்ளன

வென்றும் உலகத்தில் தோன்றிய எல்லா உயிர்களும் அழிவது திண்ணம் என்றும் குறிப்பிட்டிருந்தார். அடுத்தபடியாக ஆதி புத்தன் என்னும் நாமம் பூண்ட ஒரு மனிதனை உற்பத்தி செய்து நாரத முனிவரிடம் ஒப்புவித்தார். அவ்விருவர்களுடை கையில் தான் உற்பத்தி செய்த நூதன கிரந்தத்தைக் கொடுத்து அதை திரிபுரத்தவருக்கு உபதேசிக்குமாறு அனுப்பி வைத்தார்.

ஆதிபுத்தனும், நாரத முனிவனும் திரிபுரத்தவரை அணுகி தாங்கள் கொண்டு வந்துள்ள புதிய நூலின்பால் ஈடுபடச் செய்து சிவபக்தியிலிருந்து



கைலாசநாதர் ஆலயத்தின்
வெளித் தோற்றம்

விலகுமாறு செய்து, புத்த மதத்தவர்களாக்கி விட்டார்கள்.

மகாவிஷ்ணு தன் சூழ்ச்சி பலித்ததென்று மகிழ்ச்சி கொண்டு சிவனிடம் சென்று கோள் மூட்டினர். வந்தது சினம் சிவனுக்கு. அண்டம் ஆடத் தொடங்கியது. சிவ பக்தியிலிருந்து விலகிய அரக்கர்கோன்கள் மாண்டொழிந்தனர்.

நாரதரும் ஆதி புத்தரும் தங்களுடைய பாபச் சுமை நீங்குவதற்காக பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று காஞ்சிக்கு வந்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்களுடைய பாபச் சுமை மிகவும் குறைந்திருப்பதை உணர்ந்தார்கள். உடனே அவர்கள் ஓர் ஆலயம் எடுப்பித்து கைலாசத்திற்கு நாதரான சிவபெருமானுடைய இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பல வருடங்கள் பூஜை செய்தனர். முடிவில் சிவனுர் அவர்களுடைய இறைமாட்சியைக் கண்டு மகிழ்ந்து முக்தி கொடுத்தார்.

—இஃது கைலாச நாதருடைய ஆலயத்தைப் பற்றிக் கூறும் புராணக் கதை.

## கோயிலின் அமைப்பு

இக்கோயிலில் மூலஸ்தானத்தைச் சுற்றி மார்பால் ஊர்ந்து செல்லவேண்டிய சொர்க்க பிரதட்சணம் இருக்கிறது. இப் பிரதட்சணத்தை ஓர் உண்மையான சிவ பக்கதர் ஒரு முறை வலம் வந்தால் நிச்சயமாக முக்தி கிடைக்கு மென்றும் கூறுவர்.

இக்கோயிலில் பல்லவரைவென்ற சாளுக்கிய சிலாசாஸனம் ஒன்று இருக்கிறது. பல்லவர்கள் கட்டிய சிங்கயாளி கம்பங்கள், உன்னத விமானங்கள், வீர பிம்பங்கள் முதலியவைகளை இங்கு



கைலாசநாதர் ஆலயத்து
முன்புறத் தோற்றம்

ஏராளமாகக் காணலாம். பெரிய புராணத்தில் பூசலார் நாயனுர் சரிதையில் இக் கோயிலைப் பற்றிய சில விவரங்களைக் காணலாம்.

இக் கலைக் கூடத்திற்கு எதிரே கூடத்தைப் பார்ப்பதைப் போன்று பிண்டிக் கல்லால் ஆன ஒரு நந்தி படுத்தபாணியில் (மேற்புரம் மூடப் படாத) சிறிய மண்டப மொன்றில் மிகவும் கம்பீரமாக கண்டோர் வியக்கும்படி அமைந்துள்ளது.

கோயிலின் பிரதான வாயிலை அடைந்தவுடன் வலதுபுறம் ஒருங்கமைந்தார் போன்று ஆறு சிறிய கோயில்களும், இடதுபுறம் ஒருங்கமைந்தாற் போன்று இரண்டு சிறிய கோயில்களும் காட்சி அளிக்கின்றன. ஒவ்வொரு கோயிலின் உட்புறத்தில் "சோமாஸ் கந்தர்" சிலையுள்ளது. ஆனல் இரண்டு கோயில்களிலுள்ள லிங்கம் காணப்படவில்லை. எல்லா லிங்கங்களும் பளபளப்புடைய கருப்புக் கல்லினல் ஆன எட்டு முகத்தோடு விளங்குகிறது.

### கல்வெட்டுகள்

இக்கோயில் கல்வெட்டுகள் கருங்கல்லினுலேயே செதுக்கப்பட்டிருக்கின்றன. சிறிய கோயில்களைக் கொண்ட அப்பெரிய கூடத்தில் உள்ள கல்வெட்டு களிலிருந்து முதல் கோயிலிற்கு 'நித்ய விநித ஈசுவர கிரஹம்' என்ற பெயர் உண்டு என்பது தெரிகிறது. 'நித்ய விநீத' என்பது முதற் மகேந் திரவர்மனுக்குள்ள பல பெயர்களில் ஒன்று.

நாம் கோயிற்குள் நுழைந்ததும் குதிரைக்குளம்பு போன்ற விமானத்தைக் காண்கிரேம். பிரதான கோயில் இக்கோயிலிற்குப் பின்புறத்திலுள்ளது.



நான்கு யாளிக்கு நடுவே நந்தி

இதற்கு 'மகேந்திர வர்மேசுவர கிரஹம்' என்று பெயர். இது மூன்றும் மகேந்திரவர்மனின் ஞாப கார்த்தமாகக் கட்டப்பட்டது. இக் கோயிலின் உட் புறமும் வெளிப்புறமும் அமைந்துள்ள யாளி சிலை கள் யாவும் ஒரே அமைப்பாக அமைந்துள்ளது.

### பதினுறுமுக லிங்கம்

கர்ப்பக் கிரஹத்தினுள்ளே மகேந்திரவர்ம அரச ரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பதினுறு முகம் கொண்ட ஒரு பெரிய லிங்கம் உள்ளது. கர்ப்பக் கிரஹத்திற்கு வெளிப்புறத்திலுள்ள மண்டபத்தில் தூண்களின் மேற்புறம் தாமரைப் பூ போன்று செதுக்கப்பட்டிருக்கின்றன.

கைலாசநாதர் கோயிலின் காமுறு விமானம் 50 அடி உயரமுள்ளது. இஃது பல புஜ கோபுரமாகும். கோயிலின் உள் பக்கங்களில் சிவபெருமானுடைய பற்பல விதமானத் திருக்கோலங்கள் சிலை வடிவ மாக சமைக்கப்பட்டிருக்கின்றன.

பல நூற்ருண்டுகள் ஆயினும் இக்கோயிலைப் பாதுகாத்து வருவது போற்றத்தக்கது.

### பல்லவர் பணி

கர்ப்பக்கிரஹத்தின் உள்வெளிப் பிரகாரங்களில் உள்ள கல்வெட்டுகள் முக்கியமானவை.அவைகள் பல்லவ கிரந்தத்தில் உள்ளன. பல்லவ வீரர்கள் எழுப்பிய வேறு கூடங்கள் பின்வருமாறு: 1. வைகுண்டப் பெருமாள் கோயில், 2. வல்லீசுவரர் கூடம், 3. இராஜஸ்தானேஸ்வரர் ஆலயம், 4. முக்தீசுவரர் கோயில், 5. மதங்கேசுவரர் கோயில், 6. ஐராவதேசுவரர் கோயில்.

இந்நகரில் அநேக கல்வெட்டுகள் உள்ளன வென்று 1882வது ஆண்டிலே 'ஸர் வாவ்தர் எலிபட்' என்னும் பேராசிரியர் குறிப்பிட்டு இருப் பது குறிக்கத் தக்க சான்ருகும். இவர் இந்நகரில் 283 கல்வெட்டுகளை ஆராய்திருக்கிருர்.



கைலாசநாதர் கோயிலுக்கு அருகில் உள்ள ஸர்வ தீர்த்தக் குளம்

கி. பி. 640 விஜயம் செய்த யுவான்சுவாங் என்ற சீன யாத்திரீகர் காஞ்சியின் எழில், ஆட்சி, பெருமை இவைகளைப் பற்றி கூறி யிருப்பது சான் ருேர்கள் அறிந்ததே, சிம்மவிஷ்ணு (கி. பி. 575-600) இரண்டாவது நரசிம்மவர்மன் (கி. பி. 680-722) நந்திவர்ம பல்லவமாலா (கி. பி. 725-790) ஆகிய பல்லவப் பேரரசர்கள் மிகவும் புகழ் பெற்று அரசாட்சி செலுத்தியவர்கள் ஆவார்கள். முதல் மகேந்திரவர்மன் பல குகைக் கோயில்களை அமைத் தார் என்பது குறிப்பிடத் தக்கது.

பல்லவர்கள் காஞ்சியை கி. பி. 3 லிருந்து 9வது நூற்ருண்டுவரை தன்னில் கொண்டு மணியெனச் சில அழியாச் சீர்த்திருத்தங்கள் செய்துவைத்தனர். அகலமான வீதிகள் கண்ணைக் கவ்வும் கல்வெட்டு கள், மார்தட்டி நிற்கும் மறக்குலவீரன் போல இறு மாந்து நிற்கும் கோபுரங்கள். போர்க்களத்தில் பழு தடைந்த வேலைப் போன்று சின்னபின்னமாக இருக்கும் பல்லவ மன்னர்களின் அரண்மனை ஆகிய இவைகள் பண்டைப் பல்லவ ஆட்சியை நினைவுபடுத்திக் காண்பவர் மனத்தை பெருமை கொள்ளச் செய்கின்றன.

# ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயம்

## (Sri Eakambaranathar Temple)

"பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டும் கண்டும் களிந்துகாண் நெஞ்சமே
வண்டுலா மலர்ச் செஞ்சுடை ஏகம்பன்
தொண்டனாய்த்திரி யாய் துயர் தீரவே."

காஞ்சிபுரம் சென்னைக்குத் தென்மேற்கே 45 மைல் தூரத்தில் உள்ளது. இது பல ரஸ்தாக்களாலும், இருப்புப் பாதைகளாலும் இணைக்கப்பட்டுள்ளது. இதைக் கோயில்கள் நிரம்பிய நகரம் என்று நாம் கூறலாம். நீலநிறம் பொருந்திய விண்ணைத் தொடும் அளவு பல கோபுரங்களை இங்கே காணலாம். பாரதத்தின் கண்கள் எனத் தகும் ஏழு புகழ்மிக்கப் புண்ணியத் தலங்களில் இஃதும் ஒன்று, பல்லவ, சோழ, விஜயநகர அரசர்களால் எழும்பிய, பல சின்னக் கூறுகளை இங்கு காணலாம். பல்லவ வேந்தர்கள் காஞ்சிமா நகரத்தைத் தங்கள் தலைநகரமாக்கி, விண்ணோரும் மண்ணோரும் புகழ, சிற்பம், ஓவியம், மதம், கலை முதலிய எல்லாத் துறைகளையும் சிறப்பித்தார்கள்.

### காஞ்சியின் மேன்மை

பண்டைக் காலத்துக் கல்வெட்டுகளிலும், தமிழ்ப் பழம்பெரு நூல்களிலும் காஞ்சி, காஞ்சிப்பேடு, கச்சி, காஞ்சிபுரம், காஞ்சி என்று பல்வேறு பெயர்களால் கூறப்படுகிறது. ஆனால் காஞ்சி என்பது மிகவும் பொருத்தமானது. காஞ்சியினுடைய சரித்திரம் கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகட்கு முன்னிருந்து தொடங்குவதை நாம் பண்டைய நூல்களிலிருந்து ஒருவாறு அறியலாம். கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகட்கு முன் பதஞ்சலி முனிவர் இயற்றிய 'மகா பாஷ்யத்தில்' காஞ்சியினுடைய பெயர் இருக்கிறது, கிறிஸ்து இறந்து இரண்டு நூற்றாண்டுகட்கு பின் காஞ்சியின் பெருமையைப் பற்றிக் கூறும் சிறப்பு வாய்ந்த ஐம்பெருங்காப்பியங்களில் சீத்தலைச்சாத்தனார் இயற்றிய 'மணிமேகலை' என்ற நூலிலிருந்தும், உருத்திரன் கண்ணனார் இயற்றிய "பெரும்பாணாற்றுப் படை" என்ற சிறப்பு வாய்ந்த நூலிலிருந்தும் நாம் காஞ்சியின் மேன்மையை அறியலாம்.



ஸ்ரீ காமாட்சியம்மன் கோயிலின்
உட்தோற்றம்

தேசமெலாம் புகழ்ந்தேத்தும் கச்சித் திருவேகம்பர் ஆலயம் சிவகாஞ்சியில் உள்ளது. ஈசுவரர்; ஸ்ரீஏகாம்ரேசுவரர். அம்மன்; ஏலவார் குழலி. ஸ்ரீ ஏகாம்ரநாதர் ஆலயமும்; விஷ்ணு காஞ்சியிலுள்ள யதோக்தகாரி பெருமாள் கோயிலும் கி. பி. 7-வது நூற்றாண்டுகட்கு முன் கட்டப்பட்டதென்று சரித்திரத்தின் வாயிலாக நாம் அறிகிறோம். பின்னர் அவ்வப்பொழுது ஆலயத்தைச் செப்பனிட்டு விஸ்தரிக்கப்பட்ட போதிலும் கர்பக்கிரஹம் பழைய நிலையிலேயே வைத்துப் பாதுகாக்கப்படுவது போற்றத் தக்கது.

### கோயிலின் வளர்ச்சி

கி. பி. 1509-1530 வரை ஆண்ட கிருஷ்ண தேவராயர் என்ற கீர்த்தி வாய்ந்த விஜயநகரத்து அரசர் 1509-ம் ஆண்டில் ஒன்பது அடுக்குகள் கொண்ட 192 அடி உயரம் தென்கோபுர வாயிலைக் கட்டி வைத்தார். கர்பக்கிரஹத்திற்கு எதிரிலுள்ள கல்யாண மண்டபமும் விஜயநகரத்து அரசர்களால்தான் கட்டப்பெற்றது.

தற்சமயம் சுமார் முப்பது ஏக்கர் விஸ்தீரணத்தில் உள்ள இப்பெரிய ஆலயமானது முன்னுளில் ஒரு சிறிய ஆலயமாக இருந்து மண்டபங்களும், மதில்களும், கோபுரங்களும் பிறகு பல அரசர்களால் விஸ்தரிக்கப்பட்டதாக அறிகிறேம், மூன்ருவது குலோத்துங்கனும், கிருஷ்ணதேவராயரும் இவ்வாலயத்தை விஸ்தரித்தார்கள். ஸ்ரீ. பெர்குஸன் என்னும் பேராசிரியர் சொல்லுவதுபோல் இக்கோயிலிலுள்ள கோபுரங்களும் வாயில்களும் நேருக்கு நேராக இல்லை. இக்கோயிலின் கட்டிட அமைப்பிலிருந்து பல அரசர்களால் இந்த ஆலயம் கட்டப்பட்டது என்று நாம் அறியலாம்.

## கோயில் சிறப்பு

இக்கச்சி ஏகாம்ரேசுவரரைத் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் தாங்கள் இயற்றிய தேவாரத்தில் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள்.

ஏகாம்ரேசுவரர் கோயிலில் உள்ள லிங்கமானது பிருத்வி (மண்) லிங்கமாகும். இது தென்னிந்தியாவிலுள்ள ஐந்து கீர்த்தி வாய்ந்த பெருமைபெற்ற லிங்கங்களில் ஒன்ருகும். (மற்றவை : 1. ஜம்புகேசுவரத்திலுள்ள அப்புலிங்கம் (ஜலம்) 2. திருவண்ணமலையிலுள்ள தேஜோலிங்கம் (நெருப்பு) 3. காளஹஸ்தியிலுள்ள வாயுலிங்கம் (காற்று) 4. சிதம்பரத்திலுள்ள ஆகாசலிங்கம். இந்த லிங்கத்திற்குப் புனுகுச் சட்டத் தைல அபிஷேகம்தான் செய்யப்படுகின்றது. மற்ற அபிஷேகம் எல்லாம் ஆவடையாருக்குத்தான் செய்யப்படுகிறது.

இக் காஞ்சியானது கம்பா நதிக் கரையில் (வேகவதி) உள்ளது. சிலர் ஏகாம்ரேசுவரர் என்ற பெயர் வந்ததற்குக் காரணம் இக்கோயிலில் உள்ள ஒரு புனித மாமரம் தான் என்று கூறுகிருர்கள்.

## ஒற்றை மாமரம்

(சிவபிரான் இங்கு "ஒற்றை மாமரத்தின் அடியில் எப்பொழுதும் இருப்பதால், அச்சிவனுக்கு" ஏகாம்ரநாதனென மக்கள் கூறுகிருர்கள்.)

ஏகம் – ஒன்று
ஆம்ரம் - மாமரம்
ஏக—ஆம்ரம்—ஏகாம்ரம்.
(இது பகுதிப் பொருள் விகுதி).

ஏகம்ப நாதன் 'ஏகாம்ர நாத' என்னும் வடசொல் திரிபு.

## கோயில் அமைப்பு

இந்தக் கோயிலில் ஐந்து பிராகாரங்கள் இருக்கின்றன. ஆயிரங் கால்களைக் கொண்ட ஓர் உயர்ந்த மண்டப மிருக்கின்றது. ஆனுல் தற்போது அம்மண்டபத்தில் 616 கால்கள்தான் உள. மற்றவைகள் இடிந்து கிலமாகிவிட்டது. 1889-ம் ஆண்டில் நாட்டுக்கோட்டை நகர பிரபல தன வைசியர் ஸ்ரீ இலட்சுமண செட்டியார் பல லட்ச ரூபாய்கள் செலவு செய்து இக்கோயிலைப் புதுப்பித்தார்.

## ஸ்தல புராணம்

சிவபெருமான் முத்தொழில் புரிகையில், அவர் திருக் கண்களை உமா தேவியார் விளையாட்டாகத் தமது திருக்கரங்களால் மூடி, உலக முழுமையும் இருள் சூழும்படிச் செய்தார். அந்த அபசாரத்தைப் போக்கிக் கொள்ள, இங்கு வந்து மாமரத்தின் அடியில் மணலால் லிங்கம் பிடித்து, பூஜை செய்து, சிவபெருமான் உண்டாக்கிய இடர்களை மகா விஷ்ணுவின் உதவியால் போக்கித் தவம் புரிந்து வந்தார். முடிவில் சிவபெருமான் தமது ஜடையிலிருந்து விடுத்த கங்காநதி வெள்ளத்தில் அம்மணல் லிங்கம் கரையாமலிருக்கத் தமது மார்பிடையில் கட்டி அணைத்து மிகுந்த பக்தியுடன் தழுவியபோது சிவபெருமான் மனம் குழைந்து மட்டிலா மகிழ்ச்சி எய்தி ஸ்ரீ பார்வதி தேவியை மீண்டும் தன் நாயகியாய் இருக்க வரமளித்து பங்குனி உத்திரத்தில் மணந்து தமது இடதுபுறம் தந்து அருளினுர்.

## காஞ்சி புராணம் தரும் வரலாறு

கைலயங்கிரியில் சிவபெருமான் பார்வதியினுடைய கலியாணத்தைக் கண்டு தரிசிக்கத் தேவர்களும் முனிவர்களும் ஒருங்கே கூடினுர்கள். அவர்களுடைய கனத்தைத் தாங்க மாட்டாமல் உலக



புனித மாமரம்



162275

மானது ஒருபுறமாக சாயத் தொடங்கியது. இதைக் கண்ட சிவபெருமான் அகஸ்தியரைக் கூப்பிட்டு உலக பாரத்தைச் சரிகட்ட தெற்கே காஞ்சிக்குச் செல்லும்படி உத்தரவு இட்டார். அதைக் கேட்ட அகஸ்தியர் சிவபெருமானிடம் திருக் கலியாண மகோற்சவத்தைக் கண்டு ஆனந்திக்கும் வாய்ப்புத் தமக்குக் கிட்டவில்லையே என்று பிரார்த்திக்க உடனே சிவபெருமான், "நீர் கண்டு களிப்பதற்காக நாம் காஞ்சியில் வந்து உமையாளைத் திருமணம் செய்து கொள்கிறோம்" என்று வாக்களித்தார். பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தில் நடக்கும் திருக்கலியாணம் அகஸ்தியருக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றத்தான் என்றும் கூறுகிறார்கள்.

### புனித மாமரம்

இக்கோயிலில் உள்ள மாமரமானது மிகவும் பழமையானது, புனிதமானது. நான்கு வேதங்களை நான்கு கிளைகளாகக் கொண்ட இத்தெய்வீக மாமரம் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, எரிப்பு ஆகிய நால் வகைக் கனிகள் காய்க்கும் மரமாக உள்ளது.



பழம்பெரும் மாமரத்தடியில்
ஏகாம்பரேச்வரரும் ஏலவார் குழலியும்

இஃது வேத ஸ்வரூபமானது. மக்கட் பேறு இல்லாதவர்கள் இம்மரத்தின் கனியை உண்பார்களேயானால் புத்திர சந்தானம் கிடைக்கப் பெறுவார்கள் என்று பலருடைய நம்பிக்கை.

### விஷ்ணு சந்நிதி

இப்பெருமை வாய்ந்த சிவஸ்தலத்தில் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற 'நிலாத் திங்கள் துண்டத்தான்' என்ற விஷ்ணு சந்நிதியும் இருக்கின்றது. இது காஞ்சியிலுள்ள 18 விஷ்ணு ஸ்தலங்களில் ஒன்று தாயார் திருநாமம், நேரொருவரில்லாவல்லித் தாயார். பெருமாள் நின்ற திருகோலம். மேற்கே திருமுக மண்டலம்.

இக்கோயிலில் விலையுயர்ந்த திருவாபரணங்கள் உள்ளன. ஸர். சி. பி. இராமசுவாமி ஐயர் குடும்பத்தார் இக்கோயிலிற்கு விலையுயர்ந்த ஆபரணங்களை அளித்திருக்கிறார்கள்.

ஏகாம்ரநாதர் கோயிலில் வெள்ளித் தகடுகளாலும் தங்க முலாம் பூசப்பட்ட தகடுகளாலும் ஆன விலையுயர்ந்த பல வாகனங்கள் உள்ளன. சுமார் 3 லட்ச ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட வெள்ளி இரதமானது 1931-ம் ஆண்டு துவங்கபெற்று 1949-ல் பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கு சுமார் 60,000 ரூபாய் வெள்ளியும் 20,000 ரூபாய் தங்கமும் செலவழிந்தது.

### ஒன்றில் ஆயிரத்தெட்டு லிங்கங்கள்

மாவடியைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் 108 சிவலிங்கங்களும் 108 சிவலிங்கங்கள் கொண்ட ஒரு லிங்கமும் 1008 சிவலிங்கங்கள் அமைந்துள்ள ஒரே லிங்கமும் உள்ளது. 'அறுபத்திமூவர்' நாயன்மார்கள் சந்நிதியும் உள்ளது. இக்கோயிலில் இரண்டு குளங்கள் உண்டு. ஒன்று கம்பாநதி. மற்றொன்று சிவகங்கையாகும்.

பங்குனி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவத்சவத்திற்கும் கடைசி நாளான உத்திர நட்சத்திரத்தில் நடக்கும் திருக்கலியாண வைபவத்திற்கும் பிரதி வருடமும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து தரிசிக்கின்றார்கள்.

" மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்து
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே."

# ஸ்ரீ காமாட்சி கோயில்

## (Sri Kamakshi Temple)

" அயோத்யா, மதுரா மாயா
காசி, காஞ்சி அவந்திகா
பூரி, த்வாரா வதிஸ் சைவ
ஸப்தயிதேதி மோக்ஷதாயக:"—

என்று வழங்கும் புண்ணிய க்ஷேத்திரங்கள் ஏழில் காஞ்சிமா நகரம் ஒன்று. காசியைக் காட்டிலும் காஞ்சி மேன்மைப்பட்டது. இதை தட்சிண காசி என்று சான்றோர்கள் கூறுவதும் உண்டு. இஃது புனிதமான க்ஷேத்திரம். இதற்குச் சமீபத்தில் வேகவதி என்னும் புண்ணிய ஆறும், இரண்டு கல் தொலைவில் க்ஷீர நதியும் (பாலாறு) தென் பாகத்திலிருக்கின்றன. இது சென்னைக்குத் தென் மேற்கே 45 மைல் தூரத்தில் உள்ளது.

கி. பி. 3-வது நூற்றுண்டு முதல் 9-வது நூற்றுண்டு வரை பல்லவர்களும், கி. பி. 9-ம் நூற்றுண்டிலிருந்து 13-ம் நூற்றுண்டு வரை சோழர்களும், கி. பி. 14-வது நூற்றுண்டு முதல் 17-வது நூற்றுண்டு தொடக்கம் வரை விஜயநகர வேந்தர்களும், பிறகு மகமதியர், மராத்தியர், மறுமுறை மகமதியர்கள் ஆகியவர்களும் காஞ்சிமா நகரை அரசாண்டு வந்தார்கள். பிரெஞ்சுக்காரர்கள் கி.பி. 1757-ல் ஒரு முறையும் 1760-ல் மற்றொரு முறையும் காஞ்சியைத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். பிறகு வெள்ளையர்களால் கைப்பற்றப்பட்டது. காஞ்சியில் புத்த மதமும், ஜைன மதமும், சைவ, வைஷ்ணவ மதங்களும் ஓங்கி யிருந்தன வென்று சரித்திர வாயிலாக நாம் அறிகின்றோம். ஆனால் சைவத்திற்கும் வைஷ்ணவத்திற்கும் இன்றும் காஞ்சி ஒரு முக்கிய ஸ்தலமாக விளங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. காஞ்சிமா நகரின் அழியாப் புகழிற்கும், வளர்ச்சிக்கும் காரணமாயிருந்தவர்கள் பல்லவ, சோழ, விஜயநகர மன்னர்களும், புத்த, ஜைன, சைவ, வைஷ்ணவ மதாச்சாரியார்களும் என்று கூறலாம்.

காஞ்சியில் முக்கியமானவைகளாகக் கருதப்படும் எல்லாவற்றிலும் காமாட்சி அம்மன் கோவில் ஒன்றுகும். பொதுவாக அம்பாள்களைப் பற்றிக் கூறுகையில் "காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீனுட்சி" என்று கூறுவதைக் கேட்கிறோம். காமம் ஆட்சி=காமாட்சி. அதாவது இன்பம் உண்டாக்குபவள் என்று பொருள். அல்லது வசீகரிக்குந் தன்மையுடைய விழிகளை உடையவள் என்பது பொருந்தும் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். பிறிதொரு சாரார் கா என்றால் சரஸ்வதி, மா என்றால் லட்சுமி, க்ஷி என்றால் பார்வதி ; எனவே அம் மூவரையும் கண்களாக உடைய பராசக்தி என்று கூறுகின்றார்கள். சிவபெருமானைப் பரிகசித்துப் பழித்ததனால் வந்த விருபாக்ஷியை யுடையவள். ஸ்ரீ மகாவிஷ்ணு



கால பைரவர்

வினால் அழகிய கண்களை அருளப்பெற்றவள். தன்னைத் தரிசித்தோர் அனைவர்களுக்கும் காமுற்ற (விரும்பிய)வற்றை யெல்லாம் (புத்தி, முத்தி ஆகிய இரண்டையும்) அளிக்கவல்ல, குளிரக் கடாக்ஷம் அளிக்கும், அழகிய திருக்கண்களை யுடையவள் காமாட்சி ஆவாள். ஸ்ரீ ஆதி பராசக்தி பிலாகாசத்திலிருந்து வெளியே வந்து காயத்ரி அரங்கில் தன்னந் தனியாய் இருந்து வலக் கண்ணிலிருந்து பிரம்மாவையும், இடக்கண்ணிலிருந்து விஷ்ணுவையும், நெற்றிக் கண்ணிலிருந்து சிவனையும் சிசுக்களாய் சிருஷ்டித்து முறையே தமது சிருஷ்டி,ஸ்திதி,சம்ஹாரப் பாலையூட்டி முக்கடவுள்



சமணர் நிர்மாணித்த ஸ்தூபி

களை முத்தொழிலுக்கு அனுமதித்து, உலக வளர்ச்சிக்குக் காரணமான காமத்தால் அவ்வாறு படைத்ததால் பராசக்திக்குக் காமாட்சி என்று ஏற்பட்டது.

அம்பாளுக்கு ஸ்ரீ காமாட்சி, ஸ்ரீ மகாதேவி, திரிபுர சுந்தரி, பராசக்தி என்று பல திருநாமங்கள் உண்டு. இந்தக் கோயிலைச் சுற்றி சண்பக விருட்சங்கள் மிகுந்த சண்பகாரண்யம் இருந்ததாகக் கூறுகின்றார்கள். பஞ்ச மூர்த்திகள் ஏற்படுத்திய பஞ்ச தீர்த்த புஷ்பகரணியுள்ளது. ஸ்ரீ காமாட்சியம்பாள் மூலமூர்த்திக்கெதிரில் ஸ்ரீ சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கர்ப்பக்கிரகத்தில் மஹாபிலம் உள்ளது. அதன் மீது 24 ஸ்தம்பங்கள் உள்ளன. காயத்ரி அரங்கில்தான் ஸ்ரீ அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறாள்.

காஞ்சியிலுள்ள எல்லா சிவாலயங்களுக்கும் காமாட்சி மூலமூர்த்தி தான். மூலவர் அம்பாள். உற்சவர்கள் மாத்திரமே எல்லாச் சிவாலயங்களிலும் இருக்கின்றன. இக் கோயிலில் இருந்த பங்காரு காமாட்சி என்கிற ஸ்வர்ண காமாட்சி விக்கிரகத்தை 1767-ம் வருடம் ஹைதர் அலியின் கலகத்தின் போது தஞ்சாவூருக்குக் கொண்டுபோய் வைத்திருந்தார்கள். கலாபனை முடிவடைந்ததும் தஞ்சை அரசர் ஸ்ரீ அம்பாளைத் திருப்பிக் கொடுக்க மறுத்துவிட்டார். ஆகையால் அவ் விக்கிரகம் இப்



பிரதான வாயில்

போது தஞ்சையிலேயே இருக்கிறது. ஸ்ரீமத் ஆதி சங்கராச்சாரிய ஸ்வாமிகள் இங்குள்ள பிலாகாசத்துள் இறங்கி, பிரம்ம ஐக்கியமானதாகவும் கூறப்படுகிறது. முன்பு தேவர்கள் துயரம் நிர ஸ்ரீதேவி சம்ஹரித்த பந்தகாசுரனைப் புதைத்து இந்தச் சண்பகாரண்யத்தில் கிளிகளாயிருந்த தேவர்கள், ஸ்ரீ அம்பாள் ஆணைப்படி கட்டியிருந்த ஜயஸ்தம்பத்தை மீண்டும் கட்டிவைத்தார். ஸ்ரீ ஆசார்யாள் பௌத்த மத நிரஸனம் செய்து, வேத மதத்தை நிலைநாட்டிக் காஞ்சியில் ஷண் மதஸ்தாபனம் செய்தபோது, "சக்தி" மதத் தலைமை ஸ்தானமாகப் பிரதிஷ்டை செய்ததே இந்த காமாக்ஷியம்

பாள் கோயில் ஆகும். ஸ்ரீ சங்கராச்சாரியார் விக்கிரஹம் ஆதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இந்தக் கோயிலில்தான், இங்கு பிரதி பௌர்ணமியிலும் சித்திரை மாதம் ஸ்ரீ சங்கர ஜெயந்தி உற்சவம் பத்து நாட்களிலும் ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் உற்சவருக்கு வீதி புறப்பாடும் நடக்கிறது.

ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸன்னதிக்கு எதிரில் ஸ்ரீ துர்வாசர் சந்நிதியும் கர்ப்பக் கிரஹத்திற்குப் போகும் வாயிற்படிக்கு எதிரில் ஸ்ரீ அன்னபூரணி சந்நிதியும் சங்கராச்சாரியார் ஸ்வாமி சந்நிதிக்கு வலதுபுறம் பழைய திருவாபரணக் கொட்டடியில் ஸ்ரீசாஸ்தா சந்நிதியும், ஸ்ரீ பங்காரு காமாட்சி சந்நிதியின் வலப்புறம் சரஸ்வதி சந்நிதியும் தென்புறம் உற்சவர் சந்நிதியும் கர்ப்பக்கிரஹ முன் மண்டபம் தென் புறத்தில் வராகியும், ஸ்ரீ அம்பாள் வலப்புறத்தில் ஸ்ரீ கள்வர் என்ற பாடல் பெற்ற விஷ்ணு ஸ்தலமும் இருக்கின்றன. ஸ்ரீ அம்பாள் அபிஷேக தீர்த்தம் குளத்தில் விழும் கருமாறு பாய்ச்சல் வழியின் மேல் நின்ருன், இருந்தான், கிடந்தான் என்ற திருமால் சந்நிதியும், அப்பாச்சலுக்கு இருபுறமும் ஆண் பெண் பூதங்களும் உள்ளன. கீழ்க்கோபுரத்தில் ஸ்ரீ வைரவர், ஸ்ரீ துர்க்கை சந்நிதிகளும் வெளி வாசலெதிரில் ஞானமிருத கூபம் என்ற கிணறும் யாசகசாலேயும் அவ்விடத்தே காணப்படுகின்றன. நூற்றுக்கால் மண்டப வேலே பூர்த்தி பெறவில்லே. பிரதி பௌர்ணமியிலும் நவாவரண பூஜை நடக்கிறது. மாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடக்கிறது. கடைசி நாள் உதயம் விஸ்வரூப சேவை மகா விசேஷமானது. கி. பி. 1554-ல் இந்நகருக்கு விஜயம் செய்த ஸ்ரீ அச்சுத தேவ மகாராயர் என்னும் விஜயநகரஅரசர் திருமுன் காணிக்கையாக எட்டு கிராமங்களே அம்பாளுக்கு அளித்ததாதச் சில சாஸனங்கள் செப்புகின்றன. இக் கோயிலிலிருந்து பல புத்த விக்கிரஹங்கள் கண்காட்சிசாலேக்குக் கொடுக்கப்பட்டன.

கோயிலிற்கு அருகாமையில் அமைந்துள்ள வஸந்த உற்சவத் தோட்டத்தில் ஒரு பெரிய புத்த விக்கிரஹம் உள்ளது. கோயிலிற்கு வெகு சமீபத்திலுள்ள சிவகஞ்சி போலீஸ் ஸ்டேஷனில் ஓர் புத்தர் சிலே இருக்கிறது. இங்கு நவராத்திரி உற்சவமும் மாசி மாதம் பிரம்மோற்சவமும், சித்திரையில் வஸந்த நவராத்திரி உற்சவமும் வெகு முக்கியமானவைகள் ஆகும்.

இங்குள்ள சாத்தான் (சாஸ்தா) கையில் உள்ள செண்டைப் பெற்ற கரிகாற்பெருவளத்தான், இமயத்தை அக்கைச் செண்டால் அடக்கி, புலிக் கொடியை இமயத்தில் நாட்டிய வரலாறு கலிங்கத்துப் பரணி முதலான நூல்களில் காணலாம்.

இங்குள்ள பெருமாள் ஸ்ரீ கள்வர் — கமலவல்லி நாச்சியார்—புஷ்ப விமானம்—கௌரி புஷ்கரணி—மேற்கே. திருமுக மண்டலம்—நின்ற திருக்கோலம்—பார்வதிக்கு பிரத்யட்சம் உள்ளன.

திருமங்கையாழ்வார் மங்களா சாசனம் செய்திருக்கிருர். உற்சவர் சந்நிதிக்கு எதிரில் சோழ ராஜன் சுண்ணும்பு செங்கல் கட்டிட சிலே ஒன்று இருக்கிறது. இக் கோவில் மொத்தம் 4 ஏக்கர் 16 செண்டு விஸ்தீரணமுடையது. இந்த அம்பாளுடைய வைபவ விசேஷங்களே ஸ்ரீ காமாட்சி லீலாப் பிரபாவம், தேவி பாகவதம், காஞ்சிப் புராணம் முதலிய நூல்களில் விசேடமாகக் காணலாம்.

O2:457-211
N56
162275
சென்னை-600 008

# அஷ்டபுஜம் கோயில்

## (Ashtabujam Temple)

நடு காஞ்சிக்கு நல் முத்தென இரண்டு கூடங்கள் அமைந்திருக்கின்றன. பொதுச் சாலையின் மிக அருகே அவ்விரண்டும் "எங்களைப் பார்க்காமலும் செல்லலாமா?" என்பது போல கம்பீரமாக கலைக் கண்ணை உருட்டி, பிரயாணிகளைப் பார்த்துக்கொண்டு நின்றுகொண்டிருக்கின்றன. அவ்விரண்டில் ஒன்றான சொன்னவண்ணம் செய்த பெருமாள் கூடத்தை முன்னே பார்த்தோம். இரண்டாவதாகத் திகழ்வது திரு. அஷ்டபுஜக் கூடம். சாலையின் வழியாகச் செல்லும்பொழுதே இது நம் கண்ணில் தோன்றாநிற்கும்.



ஸ்ரீ அஷ்டபுஜம் பெருமாள்

திருமங்கையாழ்வாராலும், பேயாழ்வாராலும் புகழ்ந்து பாடப்பெற்ற திரு அஷ்டபுயக்கரத்தானின் தோற்றம், கண்டோர் வியக்கும்படி இருக்கிறது. மற்ற இடங்களில் நான்கு கைகளோடு காட்சியளிக்கும் திருமால் இவ்விடத்தில் எண்கரத்துடன் காட்சியளிக்கிறார். வலது நான்கு திருக்கைகளில் காணப்படும் ஆயுதங்கள் கத்தி, சக்கரம், தாமரை, அம்பு. இடது நான்கு கைகளில் கோதண்டம், சங்கம், கேடயம், கதை (gada) ஆகியவைகள்.



ஸ்ரீ பூவராக ஸ்வாமி

பிரம்மா தன் மாபெரு வேள்வியை நடாத்திக்கொண்டிருந்த காலத்து, அரக்கர்கள் அவ்

வேள்விக்கு இடையூருக வந்து சேர்ந்தனர். அவர்களுக்குத் துணையாக சிவபெருமான் எண்கால் சரபமாகத் தோன்றி வந்தார். இதை அறிந்த பிரம்மா திருமாலை வேண்ட, அவர் எண் கரத்துடன் தோன்றி, எண்கால் ரூப சரபத்தை வீழ்த்தி யாகத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தார் என்பது ஸ்தல புராணம் கூறும் வரலாறு.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் கூறுகிருர், "கடவுள் தன் நான்கு கைகள், தன் அருமை பக்தர்களை ஆசீர்வதித்து ஆட்கொள்வதற்கு, போதாதென்று இன்னும் நான்கு கைகளைப் பெற்ருர்".

(ஸ்ரீ, வேதாந்த தேசிகருடைய அஷ்டபுஜாஷ்டகம்)

இக்கோயிலின்கண் வீற்றிருக்கும் பூவராகப் பெருமான், இக் காஞ்சீபுரத்திற்கே ஒரு மகிமை யளிக்கின்ருர். இங்கே திருமால் சிங்க முகத்துடனே வீற்றிருந்த கோலத்திலே வலது கால் பூமியைத் தொடவும், தன்னுடைய இடது காலை ஆண்-பெண் ஆகிய இரு சர்ப்பங்களின் தலைகளின் மேல் வைத்துக்கொண்டு அமர்ந்துகொண்டிருக்கிருர்.



ஸ்ரீ புஷ்பவல்லி தாயார்

மகாலட்சுமி திருமாலின் இடது துடையின் மேல் வீற்றிருக்கிருர். திருமால் மகாலட்சுமியை இடது கையால் ஆலிங்கனம் செய்தவாறும், வலது கையால் மகாலட்சுமியின் திருவடிகளைப் பிடித்தவாறும் காட்சி யளிக்கிருர். ஸ்ரீ வேதாந்த தேசிகரின் 'பூசூக்தி' இப் பெருமாளைப் பற்றியே பாடப் பட்டதாகக் கருதுகிருர்கள்.

சக்கரகோடி விமானம், கஜேந்திர புஷ்கரணி ஆகிய இரண்டும் இங்கு விசேஷமானவைகள். தாயார் திருநாமம் ஸ்ரீ புஷ்பவல்லியாகும்.

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**
**திருமாலுக் கடிமை செய்.**

**அரனை மறவேல்**
**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**


## குருவார விளம்பரம்

**ஹிந்துக்கள் எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும் நாம் இனி கவனக்குறைவாக இருக்கக் கூடாத மூன்று விஷயங்கள்**

**(ஸ்ரீ காமகோடி பீட ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் அனுமதி பெற்ற முறை)**

குடும்ப நிர்வாகமும் சீரான வாழ்க்கையும் தெய்வீக அருளும் வரவர குலைந்து வருவதை தடுக்கவேண்டும்.

காப்பியையும், சினிமாவையும், கற்புக்கு ஏற்படும் ஆபத்துக்களையும் கவனத்துடன் சிறிது சிறிதாகவாவது குறைக்கும் பணியில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும்.

1. சமீப அனுபவத்தில் அரிசி, கோதுமை, நொய்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மோர்க் கஞ்சியைக் கையாண்டால் காப்பிப் பித்து குறைந்துவிடுகிறது.

2. ஆடவர்கள் பள்ளிகளில் படிக்கும் காலம்வரைக்கும், பெண்கள் எப்பொழுதுமே, சினிமா காட்சிகளுக்குப் போகாமல் இருப்பது நலம். (ஆனல் கல்வி அபிவிருத்திக்காகக் காட்டப்படும் படங்களைப் பார்ப்பதில் தோஷமில்லை).

3. ஆடைகள் கூடியவரை ஆடம்பரமில்லாத ரகங்கள் வாங்கப்படவேண்டும். இவ் விஷயத்தில் பணக்காரர்கள் வழிகாட்ட வேண்டும்.

வீட்டுப் படிப்பில் முக்கியமாக தாய்ப்பாஷையில் உள்ள பாரதப் பதிப்பில் பீஷ்மருடைய உபதேசங்களடங்கிய அனுசாஸன பர்வம் அவசியம் சேரவேண்டும்.

நாடும் குடித்தனமும் உண்மையில் சீராக, ஹிந்துக்கள் ஒவ்வொருவருடைய தனித்தனியான ஒத்துழைப்பும் வேண்டும்.

இவ்விஷயங்களில் அபிப்பிராயங்கள் உள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு தயவு செய்து எழுதவும்.

**திருடாதே; ஆற்றங்கரை, குளக்கரை, கோவில் இவ்விடங்களிலும், அவைகளின் சமீபத்திலும் அசுத்தம் செய்யாதே.**

ஸ்ரீ. ம. தர்ம தொண்டு சபை.

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,** புத்தக வியாபாரிகள், சென்னை.

TELEPHONE: 4846

# THE NATIONAL PUBLISHING CO.,

**6, KONDI CHETTY STREET, MADRAS-1.**

List of Standard Text-Books Suitable for the Pre-University Class

1. **PHYSICAL SCIENCE Part I—(Physics)**

   by S. R. Govindarajan, M.A., M. Sc., A. Inst. P. Loyola College, Madras
   and
   T. Murugaiyan, M.A., Principal, Raja Serfoji College, Tanjore.

   **PHYSICAL SCIENCE Part II—(Chemistry)**

   by T. Sakthivelu, M.A., Thiyagaraja College, Madura.

2. **MAN AND HIS WORLD—(World History)**

   by T. Dhanakoty, M.A., Sir Thyagaraja College, Madras
   and
   N. Subrahmaniam, M.A., A. M. Jain College, Madras.

*FOR DETAILS APPLY TO THE PUBLISHERS.*

*For all kinds of*

INDIAN & FOREIGN PAPER & BOARDS

AND

JOHN KIDD'S PRINTING INKS

*CONTACT:*

## SUBRAMANIAM BROTHERS

**99, ARMENIAN STREET, MADRAS-1.**

*Sole Distributors for:*

## SHREE GOPAL PAPER MILLS LIMITED

**For Madras, Andhra, Travancore-Cochin, Hyderabad & Mysore States**

**Phone: 55066 Gram: "PAPIMP"**

**ESTD. 1904**

*Specialist in :*

KANCHEEPURAM SILK SAREES
IN FAST COLOUR, FASCINATING
WITH ARTISTIC BORDERS,
NOTED FOR BEAUTY, DURABILITY

*Available at :*

WELLKNOWN SHOP

# P. S. KANDASWAMYSAH SONS

**SILK & LACE CLOTH MERCHANTS**

**70-71, Chavadi Street, Sheikupet, Kancheepuram**

**Phone No. 75**

**Branch Office :—**

**13, Ayyah Mudaly Street, Chintadripet, Madras.**

**Phone No. 86135**

# ஸ்பேட் கிளாவர் பீடிகள்

..............என்ருல்
சிறந்த பீடிகள்
என்று பொருள்

(USE ALWAYS)
25 .1st. Quality Spade Clover Beedies. 25
PLEASE LOOK OUT
SPADE
CLOVER
JADI BEEDI
FACTORY
MANNADY
MADRAS
SPADE
CLOVER
SPADE CLOVER BEEDI
TRY & ENJOY
ஸ்பேட்
கிளாவர்
ஜாடி பீடி
பாக்டரி
மண்ணடி
மதராஸ்
REGD
TRADE MARK
PROPRIETOR
M.MD.NOORULLAH.37.MANNADY ST.MADRAS.

மணத்திலும் குணத்திலும்
சிறந்தது என்பது மக்கள் முடிவு

எங்கும்
எப்பொழுதும்
கிடைக்கும்

உரிமையாளர்:

**எம். முஹம்மது நூருல்லா**
37, மண்ணடி தெரு, மதருஸ் - 1.

*Kancheepuram is famous for*

*Temples & their Architecture*



# KUMARAN & CO.

IS FAMOUS FOR
SILK SAREES OF
LATEST DESIGN &
FINE TEXTURE

**KUMARAN & CO., Gandhi Road, Kancheepuram.**

**Phone : 77**

*Insist on Being Given*

# L. G.

## The Quality ASAFŒTIDA

***Sold Everywhere***
***or direct From***

**LALJEE GODHOO & CO.**
SOWCARPET, MADRAS

*Head Office:* BOMBAY-3.

துவக்கம்: 1935



போன்: 85

அழகுக்கு அழகு செய்வது

அழகுமிக்க ஆபரணங்களே!

★

உத்திரவாதமுள்ள
பொன், வெள்ளி, கல்
நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

ஆபரண மாளிகை

## M. K. நரசிம்ம முதலியார்

பொன், வெள்ளி, நகை வியாபாரம்

141, செங்கழுநீர் ஓடைத் தெரு, பெரிய காஞ்சீபுரம்

(கம்மாளத் தெரு எதிரில்)




*Own*

**HINDUSTHAN**
*Landmaster*

MAINTAIN IN ECONOMY

*This Family Car will amaze you!*

Authorised Dealers:

**RANE (MADRAS) LTD.,**

PATULLO'S ROAD, MOUNT ROAD, MADRAS-2

EP

Tel. Address: "MARATA" Phone No. 76

# M. S. Venkobasa & Sons

SILK AND LACE CLOTH MANUFACTURERS

94, CHAVADI STREET, SHEIKUPET

KANCHEEPURAM.

Oldest and Reputed Silk and Lace Cloth Merchants, Kancheepuram.

## KASTURI COFFEE WORKS

AND

## KASTURI BAKERY & CONFECTIONERY

CATERING UNDERTAKEN

*Proprietor:* M. S. V. MUNUSWAMISA & BROS.

(SONS OF SRI M. S. VENKOBASA)

*Coffee Works Branches:* CHINGLEPUT AND ARKONAM

## வீட்டிற்கும் தோட்டத்திற்கும்
வேண்டியமட்டும்
தண்ணீர் கொடுக்க

# டெமிங் "மார்வெல்"

வாட்டர் ஸிஸ்டம்
அமைத்து விடுங்கள்




இதைத் தற்போது உங்கள் வீட்டிலுள்ள கிணற்றிலோ, குழாய் கிணற்றிலோ அமைக்கலாம். வீணாக வீட்டின் மேல் டாங்க் கட்டவோ, அதற்குள்ள குழாய்ச் செலவோ கிடையாது. இந்தப் பம்பு தானாகவே (ஆட்டோமாட்டிக்காக) வேலை செய்வதுடன் வருஷக்கணக்காக திருப்திகரமாக சேவை செய்யும்.



## குழாயைத் திறந்தால்
## தண்ணீர் கிடைக்கும்

# டெமிங் "மார்வெல்"

**வாட்டர் ஸிஸ்டம்**

ஏஜண்டுகள்:

## ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிமிடெட்,
5-7, ஸெகண்ட் லைன் பீச், மதராஸ்-1.

## பயனீர் ஸைகிள் ஹவுஸ்,
மேலக் கோபுரத் தெரு, மதுரை

# கரீம் பீடி உற்பத்திகள்

கரீம் பீடி

(பெரிய சைஸ்)

கரீம் ஜூனியர்

(மத்திய சைஸ்)

கரீம் ஸ்பெஷல்

(சிறிய சைஸ்)

கான் பஹதூர் A. அப்துல் கரீம் சாஹெப்



ஸ்தாபகர்



குலாப் மொஹயுதீன்
மானேஜிங் ஏஜெண்ட்



முகம்மத் ஜஹாருல் ஹக்
மானேஜிங் பார்ட்னர்



A. சத்தார் கான்
மானேஜிங் ஏஜெண்ட்

## A. அப்துல் கரீம் & கோ., (கரீம் பீடி பாக்டரி & பிரஸ்)

55, பேஸின் பிரிட்ஜ் ரோட் - - - வண்ணாரப்பேட்டை, மதராஸ்-21.

*Buy—*

# NATIONAL SAVINGS CERTIFICATES

***Agents for Chingleput District***

**GUILD OF SERVICE, KANCHEEPURAM**

*Space Donated by:* **Mrs. MYTHILI SRINIVASAN,**

*Municipal Councillor & Hony. Secretary, Guild of Service, Kancheepuram*



**உங்கள் குழந்தை**
**சதா சிடுசிடுப்பாகவும்,**
**பிடிவாதத்துடனும் இருந்து**

அடி வயிறு பெருத்தும் இருந்தால், அதற்குக் காரணம் ஈரல் குலைக்கட்டி வியாதியாக இருக்கலாம்; இது 3 வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படுவது சகஜம்.

ஜம்மியின்

**லிவர்க்யூர்**

ஈரல், குலைக்கட்டி வியாதிகளை
குணப்படுத்தும் வராமலும் தடுக்கும்

இப்பொழுது மாத்திரைகளாக
கிடைக்கும்




**ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்**
**"ஜம்மி பில்டிங்ஸ்", மைலாப்பூர், மதராஸ் 4.**
**பிராஞ்சுகள் : பெரியகடைத் தெரு, தெப்பகுளம், திருச்சிராப்பள்ளி; பெரிய தெரு, கும்பகோணம்; மற்றும் இதர இடங்கள்.**

மாதந்தோறும் விஜயம்

| இடம் : | தேதி : | விலாசம் : | நேரம் : |
|---|---|---|---|
| பெரிய காஞ்சிபுரம் | 28 | 86, சாலைத் தெரு | காலை 9–11 மாலை 3–5 |

For BOOKS

ON

LAW

MEDICINE

ENGINEERING

SCIENCE

ARTS

卐

*Please visit your favourite Shop*

P. VARADACHARY & CO.,

8, LINGHI CHETTY STREET, MADRAS-1.

(Estd. 1869)

Grams: "PRINTHOUSE"
Telephone: 4037
Post Box No. 1569

# Commercial Printing & Publishing House

PRINTERS
&
BLOCK MAKERS

46, ARMENIAN STREET,

MADRAS-1.

# ORIENT'S



★ The strong silent fan

★ Stave Enamel Finish

★ Filled with Heavy duty Ball-Bearings

★ Stream-lined New design

*Manufacturing:* ORIENT GENERAL INDUSTRIES LTD.

*DISTRIBUTORS:*

## HINDUSTAN DEALERS LTD.

4, STRINGER ST., :: MADRAS-1.

Phone: 2658 Grams: "DEALHIND"

SRI PARAMESWARI BHAVAN

114/115, WALL TAX ROAD

MADRAS - 3.

*Proprietor :*

K. Loganatha Mudaliar.

FOR DRUGS OF EVERY KIND PATENT MEDICINES, SURGICAL INSTRUMENTS AND HOSPITAL APPLIANCES ETC.

*Please Contact :*

*Mayer & Co.,*

16, Ayya Pillai Street

P. T., MADRAS - 3.

POST BOX 504

Phone: 3757 Grams: "MAYERDRUG"

*Mofussil orders will be promptly attended to*

PHONE: 4151

GRAMS: CLEARSHIP

FOR

CLEARING
FORWARDING
SHIPPING AND
WAREHOUSING

*International*

CLEARING & SHIPPING AGENCY



20B, SECOND LINE BEACH

MADRAS-1

ALSO

FREIGHT & STEAMSHIP AGENTS

N.P.B.


SRI AMBAL & CO
No 1
POST BOX No 3 MADRAS
SRI AMBAL SNUFF
ஸ்ரீ அம்பாள் மூக்குத்தூள்
ஸ்ரீ அம்பாள்
ஆபீஸர் பொடி
காரம், மணம், குணம், நிறைந்தது
1, தோலா டின்களிலும் எங்கும் கிடைக்கும்
ஸ்ரீ அம்பாள் & கோ
201, தங்கசாலை தெரு . . . மதராஸ் .1.

அழகுக்கு

அழகுதரும்

ஆபரணங்களுக்கு



M/s. டி. கோவிந்தராஜுலு நாயுடு



வைரம், பொன் நகைகள்,

வெள்ளி சாமான்கள் வியாபாரம்

28, நேதாஜி ரோட், மதராஸ் 1.

★

Phone: 4818 TGN Grams: "ALANKAR"

Printed at Commercial Printing & Publishing House, Madras-1.

1A
10-67